Registered as a Newspaper

பக்கங்கள் – 16+8
விலை – ரூபா 60

# உதயன்

சுடர் : 39
கதிர் : 189

ஞாயிற்றுக்கிழமை
02 ஜூன் 2024

வைகாசி 20 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055


முச்சந்தி முரளி



"எப்பிடியிருந்த யாழ்ப்பாணம்
இப்ப கொலையும், கொள்ளையும்,
மோசடியுமா பாழ்ப்பாணமா போட்டுது"

# தமிழ்ப் பொதுவேட்பாளர் எங்களுக்குச் சரிவராது!

## கூறுகிறார் சி.வீ.கே.



**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**தமிழ்ப் பொதுவேட்பாளர் எங்களுக்குச் சரிவராது - இவ்வாறு தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாணசபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.**

13

## உடுப்பிட்டியில் வாள்வெட்டு குடும்பத்தலைவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், ஜூன் 2
வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுப்பிட்டி யூனியனடிப் பகுதியில், கொள்ளையர்கள் மேற்கொண்ட சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதலால் 13

## கட்டுத்துப்பாக்கி வெடித்து இளைஞர் ஒருவர் இறப்பு!

முல்லைத்தீவு, ஜூன் 2
முல்லைத்தீவு மாவட்டம் மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட துணுக்காய் - கல்விளான் பகுதியில் கட்டுத்துப்பாக்கி வெடித்து இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். 04



சேமக்காலையில் வைத்து

## குடும்பப் பெண் எரித்துக் கொலை

### குருநகரில் நேற்றுமாலை கொடூரம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
சேமக்காலைக்கு குடும்பப் பெண்ணொருவரை அழைத்துவந்த நபரொருவர், அவரைத் தீமூட்டி எரித்துக் கொலை செய்துள்ளார். 04

வெளிநாட்டுக்கு அனுப்புவதாக

## பணமோசடி செய்த மதபோதகர் கைது



யாழ்ப்பாணம், ஜூன் 2
கொடிகாமத்தைச் சேர்ந்த நபரொருவரை வெளிநாடு அனுப்புவதாகக் கூறி மதபோதகர் ஒருவர் 15 இலட்சம் ரூபா பணம் பெற்று ஏமாற்றியமை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் முறைப்பாட்டுக்கு அமைவாக, சந்தேகநபரான மதபோதகர் கைதாகி மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
கொடிகாமத்தைச் சேர்ந்தவரிடம் பணத்தைப் பெற்ற மதபோதகர் அவரை வெளிநாட்டுக்கு அனுப்பவில்லை. பணத்தைக் கொடுத்தவர் மீளக் கேட்டுள்ளார். 04

நிதியின்மை காரணமாக

## கைப்பந்து வீரர்களின் வாய்ப்பு புறக்கணிப்பு

கிளிநொச்சி, ஜூன் 2
இருவர் பங்குபற்றும் கடற்கரை கைப்பந்து தேசியப் போட்டிக்கு கிளிநொச்சி வீரர்கள் இருவர் அழைத்துச் செல்லப்படாமை பெரும் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. 04

## காசோலை மோசடி; இருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணத்தில் நிறப்பூச்சுகள் விற்பனை செய்யும் நிறுவனம் ஒன்றிடம், 11 இலட்சம் பெறுமதியான பொருள்களைக் கொள்வனவு செய்த பின்னர் காசோலை மூலம் மோசடி செய்த குற்றச்சாட்டில் இருவர் கைது 04

சைக்கிளுடன் குளத்துக்குள் வீழ்ந்த

## இரண்டு சிறுமிகள் நீரில் மூழ்கிப் பலி!

யாழ்ப்பாணம், ஜூன் 2
குளத்தின் அணைக்கட்டு ஊடாகப் பயணித்தபோது, சைக்கிளுடன் குளத்துக்குள் தவறி வீழ்ந்த இரண்டு சிறுமிகள் பரிதாபமாக உயிரிழந்தனர்.
யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. நிறோசன் விதுஷா (வயது - 11), நிறஞ்சன் அனுஷ்கா (வயது - 5) என்ற சிறுமிகளே இவ்வாறு 13

## கிருமித் தொற்றால் பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2
ஈரல் பாதிப்பின் காரணமாக ஏற்பட்ட கிருமித் தொற்றால் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்த சம்பவம் வடமராட்சி - புலோலிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. 04

## யாழ். பொதுநூலக எரிப்பு 43 ஆவது நினைவு நேற்று!

யாழ்ப்பாணம், ஜூன் 2
யாழ்ப்பாணப் பொதுநூலக எரிப்பின் 43 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வு யாழ்ப்பாணம் பொதுநூலகத்துக்கு முன்பாக நேற்று மாலை இடம்பெற்றது.
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.
யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரியூட்டப்பட்டமையை அறிந்து பேரதிர்ச்சியால் மரணமடைந்த அருட்தந்தை டேவிட் அடிகள் 04

சஞ்சீவி

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா மருத்துவமனையின் ஒரேயொரு 'சீ.ரி.ஸ்கானும்' பழுது

## அவதியில் நோயாளர்கள்

**வவுனியா, ஜூன் 2**

**வவுனியா பொதுமருத்துவமனையிலுள்ள 'சீ.ரி.ஸ்கான்' இயந்திரம் கடந்த சில மாதங்களாக பழுதடைந்துள்ளமையால் நோயாளிகள் அவதிக்கும் - அலைக்கழிப்புக்கும் உள்ளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

வவுனியா பொது மருத்துவமனையில் ஒரேயொரு'சீ.ரி.ஸ்கான்'மாத்திரமே உள்ளது. அது கடந்த சில மாதங்களாகப் பழுதடைந்துள்ளது. இதனால் நோயாளர்கள் அநுராதபுரம், பொலநறுவை மற்றும் யாழ். போதனா மருத்துவமனைகளை நாட வேண்டியுள்ளது.

அங்கு அவர்களை கொண்டுசெல்வதற்கு ஒரு நோயாளிக்காக அம்புலன்ஸில் ஒரு மருத்துவர், தாதியர், சிற்றூழியர் ஆகியோர் பயணிக்க வேண்டுமென்பதால் நேரவிரயம் மாத்திரமல்லாது வீண்செலவும் ஏற்படுகின்றது.

எனவே பழுதடைந்துள்ள 'சீ.ரி. ஸ்கான்' இயந்திரத்தைத் திருத்தி சீரான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து செயற்படவேண்டும்என்றுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ச-110)



# தொழில்நுட்பங்களுடன் முன்னோக்கி நகர்வோம்

## ஜனாதிபதி அழைப்பு

கொழும்பு, ஜூன் 2

நாட்டில் சமூக மற்றும் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்த செயற்கை நுண்ணறிவு போன்ற நவீன தொழில்நுட்பங்களை நாட்டில் ஊக்குவித்து அதனுடன் இணைந்து நாமும் பயணிக்கவேண்டும் - இவ்வாறு பல்கலைக்கழக கல்வியியலாளர்களுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

'இலங்கை தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடைய வேண்டும். நவீன தொழில்நுட்பத்தைப் பொறுத்த வரை, நாம் மிகவும் பின்தங்கியுள்ளோம்.

பொருளாதார நன்மைகளை அடைய தொழில்நுட்ப அறிவு போதுமான அளவு பயன்படுத்தப்படவில்லை. அண்மைக்காலமாக செயற்கை நுண்ணறிவு 'ஏ.ஐ.' தொழில்நுட்பம் ஆதிக்கம் செலுத்துகிறது.

நாம் செயற்கை நுண்ணறிவுடன் முன்னேறினால், மற்ற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த முடியும். செயற்கை நுண்ணறிவுக்குள் பல தொழில்நுட்பங்கள் உள்ளடங்கியுள்ளன. அதனை நாம் பயன்படுத்தும் விதத்தை பொறுத்தே ஒரு நாடு என்ற வகையில் முன்னேற்றத்தை அடையலாம்' என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# பொன்சேகாவே பொருத்தம்

யாழ்., ஜூன் 2

ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகாவே பொருத்தமானவர் என்று முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் மகேஷ் சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.

'சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஆட்சியில் பாதுகாப்பு அமைச்சர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர் நீங்களா?, பொன்சேகாவா?'என எழுப்பப்பட்ட கேள்விக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த தேர்தலில் நான் போட்டியிட எதிர்பார்க்கவில்லை. தேசியப் பட்டியல் ஊடாக வாய்ப்பு வழங்கப்பட்டால் அதை ஏற்பது தொடர்பில் பரிசீலிப்பேன்.

அதேவேளை, தேர்தலை ஒத்திவைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டால் நாட்டில் மீண்டும் அராஜக நிலை ஏற்படக்கூடும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-44)




# 'சினோபெக்' விலையிலும் தளர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 2

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விலை திருத்தத்தைத் தொடர்ந்து 'சினோபெக்' நிறுவனமும் எரிபொருள்களின் விலையில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

அதன்படி ஒக்ரேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டு 355 ரூபாவாகவும், ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 19 ரூபாவால் குறைக்கப்பட்டு 314 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளன.

அதேவேளை, ஒக்ரேன் 95 ரக பெற்றோல் மற்றும் சுப்பர் டீசல் ஆகியவற்றின் விலையில் மாற்றம் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# நல்லைக்குமரன் மலர்: ஆக்கங்கள் கோரல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

யாழ். மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவால் வெளியிடப்படும் நல்லைக்குமரன் 32 ஆவது மலருக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டுரைகள் 5-7 பக்கங்களுக்குள் அமைதல் வேண்டும். ஏற்கனவே நல்லைக்குமரன் மலரில் வெளிவந்த, வேறு நூல்களில் வெளிவந்த ஆக்கங்கள் தவிர்க்கப்படவேண்டும். ஆக்கங்களை saivasamayavivaharam@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாக உங்கள் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கங்களை குறிப்பிட்டு எதிர்வரும் ஜூலை மாதம் 2ஆம் திகதிக்கு முன்பதாக அனுப்பவேண்டும்.

மென்பிரதியாக அனுப்பப்படாத ஆக்கங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று யாழ். மாநகரசபை ஆணையாளரும் சைவ சமய விவகாரக்குழு தலைவருமான ச. கிருஷ்ணேந்திரன் தெரிவித்தார். (ச)




# ஊடகவியலாளர் நடேசனின் நினைவுதினம் அனுஷ்டிப்பு!

வவுனியா, ஜூன் 2

சிரேஷ்ட ஊடகவியலாளர் ஐ. நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவுதினம், வவுனியா ஊடக அமையஅலுவலகத்தில் அமையத்தின் தலைவர் கு. கோகுலன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் ஊடகவியலாளர்கள் உள்ளிட பலர் கலந்துகொண்டனர். (ப-110)

# பாலஸ்தான குடமுழுக்கு

யாழ்ப்பாணம், ஜூன் 2

சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பாலஸ்தான கும்பாபிஷேகம் நாளை 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.55 மணி முதல் 10.20 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் இடம்பெறவுள்ளது என்று ஆலய தர்ம கர்த்தா சபை தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஐ.எஸ். ஐ.எஸ்.தொடர்பு மேலுமொருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூன் 2

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் மேலுமொருவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சோதனை நடவடிக்கையில் கொழும்பில் வைத்து குறித்த சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர் இந்தியாவில் கைதுசெய்யப்பட்ட நால்வரை இலங்கையிலிருந்து வழிநடத்தியவரெனச் சந்தேகிக்கப்படுகிறது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவா தெரிவித்தார். (ச-இ)

# தங்க ஆபரணம் கண்டெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 2

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில், கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. மேற்படி தங்க ஆபரணத்தை தவறவிட்டவர்கள், நீதிமன்ற பதிவாளர் காரியாலயத்தில் தகுந்த ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (அ-25-100)

# விருது வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 2

சமூக சேவையாளர்களையும், பல்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் 'வடமாகாண தேசத்தின் பெருமை' என்னும் விருது வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கருகிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மண்டபத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப)

# தேர்தலைப் பிற்போடும் திட்டம் எதுவுமில்லை

## சத்தியம் செய்கிறார் சமன் ரத்னப்பிரிய



கொழும்பு, ஜூன் 2

தேர்தலைப் பிற்போடவேண்டும் என்ற ரங்கே பண்டாரவின் கருத்து, ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்து அல்ல என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

நாடு பொருளாதார ரீதியில் மீண்டுள்ள நிலையில் தேர்தல் அவசியமில்லை என்று பலரும் கூறுகின்றனர். ஆனால் கட்சி அவ்வாறான தீர்மானம் எதையும் எடுக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார். இந்த வருடம் தேர்தல் நடைபெறுவது உறுதி -என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஜூன் மாதத்தில் பெரும் அரசியல் திருப்பங்கள்!

கொழும்பு, ஜூன் 2

தெற்கு அரசியலில் முக்கியமான சில திருப்பங்கள் நடைபெறும் மாதமாக இம்மாதம் அமையும் என அரசியல் ஆய்வாளர்கள் எதிர்வுகூறியுள்ளனர்.

கொழும்பில் முக்கியமான சில அரசியல் சந்திப்புகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனவும், இச்சந்திப்புகளின்போது எட்டப்படும் முடிவுகளின் அடிப்படையிலேயே பிரதான கட்சிகளின் நகர்வுகள் அமையவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் தான் களமிறங்குவாரா அல்லது இல்லையா என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதத்துக்குள் அறிவிக்கவுள்ளார். மறுபுறத்தில் மொட்டு - யானை கூட்டு தொடருமா அல்லது முறியுமா என்பதும் இம்மாதம் தெரியவரும்.

ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து 20 எம்.பிக்களை ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் பிரித்தெடுக்காவிட்டால் மொட்டுக் கட்சி தனியே ஜனாதிபதி வேட்பாளரை களமிறக்கும் நிலைப்பாட்டில் உள்ளது.

விமல் உள்ளிட்டவர்களின் பங்கேற்புடன் அமைந்துள்ள, சிங்கள தேசியவாத அமைப்புகளும் அங்கம் வகிக்கும் சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளரும் இம்மாதம் பெயரிடப்படவுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரொஷான் ரணசிங்க, தயாசிறி ஜயசேகர, டலஸ் அழகப்பெரும உள்ளிட்டவர்களும் தாம் எந்தப்பக்கம் நிற்கவேண்டும் என்பது தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்கவுள்ளனர்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பனவும் இம்மாதம் முதல் தமது பிரசார வியூகத்தை மேம்படுத்தவுள்ளன.

இதேவேளை - பொதுவேட்பாளர் தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் தீர்க்கமான முடிவுகளை ஜூன் மாதத்திலேயே எடுக்கவுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-44)



## புகைத்தலுக்கு எதிராக துண்டுப்பிரசுரங்கள்!

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு, தென்மராட்சிப் பிரதேச சமுர்த்தி அலகினரால், சாவகச்சேரி நகரப் பகுதியில் சந்தை மற்றும் வணிக நிலையங்களில் துண்டுப்பிரசுரங்கள் விநியோகம் செய்யப்பட்டதுடன், சுவரொட்டிகளும் காட்சிப்படுத்தப்பட்டன. சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினரின் ஏற்பாட்டில், நாடளாவிய ரீதியில் போதை மற்றும் புகைத்தலுக்கான எதிர்ப்பு வாரம் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் ஜூன் 14 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (ப-9)

## தேர்தல் ஒத்திவைப்பு; பாலித உடும்புப்பிடி!

கொழும்பு, ஜூன் 2

ஜனாதிபதித் தேர்தல், பொதுத்தேர்தல் என்பன இரண்டு ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நான் தொடர்ந்து இருக்கின்றேன். இது விடயம் தொடர்பான எனது அறிவிப்பில் தவறு இருப்பதாக உணரவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார மீண்டும் நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"நாட்டின் தற்போதைய நிலைமை மற்றும் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டே நான் இந்த அறிவிப்பை விடுத்தேன். அது சரியான - அதேபோல அறிவிக்க வேண்டியதொரு கருத்தாகும். அப்படியானதொரு கருத்தை வெளியிட்டால் நான் மனக்கவலையில் இல்லை. திங்கட்கிழமை மேலதிக தகவல்களை வழங்கவுள்ளேன். நாட்டுக்குத் தேவையானதொரு விடயத்தையே நான் கூறியுள்ளேன்.

அதேவேளை, தமிழ்பேசும் கட்சிகள் உட்பட அனைத்து கட்சிகளும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதிப் பதவியில் தொடரவேண்டும் என்பதையே விரும்புகின்றன" - என்றார். (அ-44)

## யானை தாக்கி ஒருவர் காயம்

புத்துவெட்டுவான் மருதங்குளம் பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் குட்டியுடன் பயணித்த யானையே, 45 வயதுடைய நபரைத் தாக்கியதுடன் அவர் பயணித்த உந்துருளியையும் சேதமாக்கி உள்ளது. (ப-13)

## பௌத்தத்தைக் காப்பதற்கு களனியில் களமிறங்குவேன்

### மேர்வின் சில்வா சபதம்



கொழும்பு, ஜூன் 2

"இலங்கையில் சிங்கள, பௌத்தத்தை நிச்சயம் நான் பாதுகாப்பதற்காக, அடுத்த தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில், களனித் தொகுதியில் களமிறங்குவேன்" - என்று முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"களனியைக் கைவிட்டு நான் செல்லமாட்டேன், எமக்கென்று வேலைத்திட்டமொன்று உள்ளது. அதனை முன்வைப்பேன், கம்பஹா மாவட்ட மக்களின் ஆசியுடன் அடுத்த தேர்தலில் களமிறங்குவேன்.

சிங்கள, பௌத்தத்தைப் பாதுகாப்பதன் மூலமே ஏனைய இனங்கள், மதங்கள் பாதுகாக்கப்படும். அடுத்த தேர்தலில் எனது களனித் தொகுதியில் பிக்குகளை அரசியல் மேடையேற்றுவதற்கு அனுமதிக்கமாட்டேன். ஒரு சிலரால் காவியுடை என்பது இன்று அரசியல் சீருடையாக மாறியுள்ளது" - என்றார். (அ-44)

## பஸ் கட்டணம் மாற்றமில்லை

கொழும்பு, ஜூன் 2

எரிபொருள் விலை குறைக்கப்பட்டபோதிலும், பஸ் கட்டணங்களில் மாற்றம் செய்யப்படமாட்டாது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

"ஒரு லீற்றர் டீசல் விலை 307 ரூபாவை எட்டினால் மாத்திரமே பஸ் கட்டணத்தைக் குறைக்க முடியும். பஸ் கட்டணத்தை தேசிய கொள்கைகளுக்கு அமைய, 4 சதவீதமான எரிபொருள் குறைப்புக்கு மாத்திரமே கட்டணங்களில் திருத்தம் மேற்கொள்ளமுடியும். ஆனால் டீசல் விலை 2.5 சதவீதமே குறைக்கப்பட்டுள்ளதால், பஸ் கட்டணங்களை குறைக்கமுடியாது" என்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (ச-இ)

## மதுபோதையில் பயணிகள் பஸ்ஸை கடத்திச்சென்ற ஆசாமி

கொழும்பு, ஜூன் 2

பயணிகளுடன் சென்ற பேருந்தை மதுபோதையில் இருந்த ஒருவர் கடத்திச் சென்ற சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடந்துள்ளது.

கொழும்பில் இருந்து மூதூர் நோக்கிச் சென்று கொண்டிருந்த பேருந்தே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளது. குறித்த பேருந்தை கலேவெல பிரதேசத்திலுள்ள ஹோட்டலுக்கருகில் நிறுத்திவிட்டு சாரதியும், நடத்துநரும், சில பயணிகளும் உணவருந்தச் சென்றிருந்தனர். இதன்போது மதுபோதையில் இருந்த ஒருவர் ஹோட்டல் அருகே சாரதி மற்றும் நடத்துநருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

பின்னர் அவர் ஹோட்டலை விட்டு வெளியேறி பேருந்தை இயக்கி, அதிலிருந்த பயணிகளுடன் தப்பிச் சென்றுள்ளார்.

இதனைக் கண்ட பேருந்தின் நடத்துநர், சாரதி ஆகியோர் முச்சக்கரவண்டியில் பேருந்தை துரத்திச்சென்று, அதனை மறித்து நிறுத்தியபோது குறித்த நபர் பேருந்தை விட்டிறங்கி தப்பி ஓடிவிட்டார். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-555)

## நிறைவேற்று அதிகாரமே நாட்டை முன்னேற்றியதாம்

### சொல்கிறார் ரணில்



கொழும்பு, ஜூன் 2

ஜனாதிபதிக்குள்ள நிறைவேற்று அதிகாரத்தினாலேயே 30 வருட போரை வெற்றிகொண்டு இலங்கையின் பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்தது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இளம் சட்டத்தரணிகளுடன் நடைபெற்ற சட்டமறுசீரமைப்புத் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற செயலமர்வில் அவர் இதனைத் தெரிவித்தார்.

" ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்குப் பொறுப்புக்கூறும் வகையில் சட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். தற்போது நிறைவேற்று அதிகாரத்தின் பலபிரிவுகள் மாகாண சபைகளுக்கும் நாடாளுமன்ற துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாகச் சொல்லும் எந்தவொரு வேட்பாளரும் நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதாக இதுவரை அறிவிக்கவில்லை. புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள பொருளாதார மாற்றச் சட்டத்தின் ஊடாக அடுத்த 4 வருடங்களுக்கான அரசாங்கத்தின் திட்டம் முன்வைக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு வருடமும் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் வருட இறுதியில் நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்பட வேண்டும் விரைவில் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயமாக நடத்தப்படும்.

அதற்கான நிதி ஒதுக்கீடுகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு விட்டன" என்றும் அவர் அங்கு குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நயினை அம்மன் பெருந்திருவிழா 7ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 2

வரலாற்றுச் சிறப்புமிக்க நயினா ஸ்ரீ நாக பூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருந்திருவிழா, எதிர்வரும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாவுள்ளது. தொடர்ந்து 16 தினங்கள் காலை, இரவுஎன இருநேரங்களிலும் சிறப்புப் பூசைகள் இடம்பெறவுள்ளன. ஆலயத்தின் சப்பரத் திருவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமையும், 20 ஆம் திகதி வியாழக்கிழமை இரதோற்சவமும், 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்தோற்சவமும் இரவு கொடியிறக்கமும் இடம்பெற்று, 22 ஆம் திகதி சனிக்கிழமை தெப்போற்சவத்துடன் ஆலயத் திருவிழா நிறைவுபெறவுள்ளது.

நயினை அம்மனின் ஆலய உற்சவத்தை முன்னிட்டு நேற்றுச் சனிக்கிழமை முதல், நயினாதீவு- குறிகாட்டுவான் மற்றும் குறிகாட்டுவான் - நயினாதீவு இடையேயான படகுச்சேவை தொடர்பான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நயினாதீவு-குறிகாட்டுவான் இடையே காலை 6.30 மணி முதல் மு.ப. 11.30 மணி வரையும், பி.ப. 12.30 மணி முதல் மாலை 5.30 மணி வரையும் ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் ஒரு படகு சேவையில் ஈடுபடும். இதேவேளை- குறிகாட்டுவான்- நயினாதீவு இடையே காலை 7 மணி முதல் மாலை 6.30 மணிவரை ஒவ்வொரு 30 நிமிடத்துக்கும் ஒரு படகு சேவையில் ஈடுபடும் எனவும் அந்த அறிவித்தலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப-66)



# றைனோஸ் கரப்பந்து; கோலாகல ஆரம்பம்!

**யாழ்ப்பாணம், ஜூன் 2**

**உதயன் நாளிதழின் பிரதான அனுசரணையுடன், சுழிபுரம் றைனோஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும், றைனோஸ் கரப்பந்தாட்ட பிரிமியர் லீக், வட்டுக்கோட்டை இளைய நட்சத்திர விளையாட்டுக் கழக மைதானத்தில் கழகத்தின் தலைவர் எஸ். உதயராஜ் தலைமையில் நேற்று சனிக்கிழமை கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.**

இதன்போது, இந்தச் சுற்றுப் போட்டியில் பங்கேற்கும் அனைத்து அணிகளின் சீருடைகளுக்குமான அறிமுகத்தையும், சுழிபுரம் றைனோஸ் பிரிமியர் லீக்கின் வெற்றிக்கேடயத்தையும் உதயன் குழுமத்தலைவர் ஈஸ்வரபாதம் சரவணபவன் மேற்கொண்டார்.

தொடர்ந்து சம்பிரதாயபூர்வமாக அணிகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுபோட்டிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. குறித்த சுற்றுப் போட்டிகளில் இளந்துளிர், சுழிபுரம் சூப்பர் கிங்ஸ், யங்ஸ் ஸ்ரார் , அம்பாள் வொலி ஸ்டார், பிசி கிங்ஸ், சங்கானை சலஞ்சஸ் ஆகிய கழகங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-125)

# முல்லையில் அம்மாச்சி

முல்லைத்தீவு, ஜூன் 2

வடக்கின் பாரம்பரிய உணவகமான அம்மாச்சி உணவகம் முதன்முறையாக முல்லைத்தீவில் நிர்மாணிக்கப்பட்டு நேற்றுச் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. திணைக்கள உத்தியோகத்தரின் கண்காணிப்பில் பயிற்சியளிக்கப்பட்ட முல்லைத்தீவு பெண்கள் அமைப்பினரால் இந்த உணவகம் நடத்தப்படவுள்ளது. (ச-500)

## கிருமித்...

காந்தியூர், புலோலி வட மேற்கைச் சேர்ந்த அன்னலட்சுமி இராமச்சந்திரன் (வயது-57) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி குடும்பப் பெண்ணுக்கு நேற்றுச் சனிக்கிழமை காலை சிறுநீர் அடைப்பு ஏற்பட்டு அவதியுற்று மூச்சில்லாமல் கிடந்துள்ளார். இதையடுத்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

உயிரிழப்புத் தொடர்பில் பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையில் ஈரல் பாதிப்படைந்து அதன்மூலம் கிருமித் தொற்று ஏற்பட்டு, உயிரிழப்பு சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது. (அ-ஒ-100)

## பணமோசடி...

இதனையடுத்து மதபோதகர் காசோலையை வழங்கியுள்ளார். காசோலையில் பணம் பெறமுடியாததால், மீளவும் காசைக் கேட்டபோது அரசியல் செல்வாக்கு மேலிடங்கள் தனக்குத் தெரியும் என்றும் தன்னிடம் காசைக்கேட்கவேண்டாம் என்றும் மிரட்டியுள்ளார்.

இதனையடுத்து இளைஞர் யாழ். மாவட்ட சிறப்பு குற்ற விசாரணைப் பிரிவிடம் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணை மேற்கொண்ட யாழ். மாவட்ட மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்தவின் கீழ் இயங்கும் மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி குணறோயன் தலைமையிலான குழுவினர் நீர்கொழும்பைச் சேர்ந்த மதபோதகரை கைதுசெய்தனர்.

சந்தேகநபரை சாவகச்சேரி நீதிவான் முன்னிலையில் முற்படுத்தியபோது, சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் யூட்சன் சந்தேகநபரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (அ-ஒ-26)

## குடும்பப்...

இந்தக் கொடூரமான சம்பவம், யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் அமைந்துள்ள கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இ. பவானி (வயது - 45) எனும் குடும்பப் பெண்ணை மேற்படி நபர் ஏற்றிக் கொண்டு சேமக்காலைக்கு வந்துள்ளார். இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து, அந்தநபர் மேற்படி பெண்ணின் தலையில் பெற்றோல் ஊற்றித் தீமூட்டியுள்ளார்.

அயலவர்கள் இதை அவதானித்து தீயை அணைத்து, அந்தப் பெண்ணை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். மருத்துவமனையில் சிகிச்சையின் போது பெண் உயிரிழந்தார். குற்றத் தடுப்புப் பொலிஸார் நடத்திய விசாரணைகளையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-26-20-100)

## கட்டுத்துப்பாக்கி...

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கண்ணையா அன்பழகன் (வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். உயிரிழந்தவரின் சடலம் மல்லாவி ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டதுடன், மேலதிக விசாரணைகளை மல்லாவிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-35)

## யாழ்...

மற்றும் போரில் கொல்லப்பட்ட அனைத்துத் தமிழ் உறவுகளுக்குமாக நிகழ்வில் கலந்துகொண்டவர்கள் தமது கைகளில் நினைவுச் சுடர்களை ஏற்றி இரண்டு நிமிட அஞ்சலியைச் செலுத்தினார்கள். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் நிகழ்வில் நினைவுரையாற்றினார். (அ-ம-66)

## காசோலை...

செய்யப்பட்டுள்ளனர். வவுனியாவைச் சேர்ந்த மேற்படி இருவருக்கும் எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட விசேட குற்ற விசாரணைப் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட முறைப்பாடுகளையடுத்து, மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளனர். (அ-ம-26)

## கைப்பந்து...

கிளிநொச்சி மலையாளபுரத்தைச் சேர்ந்த புதிய பாரதி விளையாட்டுக் கழகத்தின் இரண்டு வீரர்கள் கரைச்சி பிரதேச செயலக பிரிவு, மாவட்ட, மாகாண மட்டங்களில் மேற்படி போட்டிகளில் பங்குகொண்டு வெற்றியீட்டியுள்ளனர். இவர்களுக்கான தேசிய போட்டி நீர்கொழும்பில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பித்து சனி, ஞாயிறு ஆகிய மூன்று தினங்கள் இடம்பெறுகிறது. இந்தப் போட்டிக்கு மேற்படி வீரர்கள் இருவரும் உரிய அதிகாரிகளால் அழைத்துச் செல்லப்படவில்லை.

எனவே "ஏன் தேசியமட்டப் போட்டிக்கு அவர்களை அழைத்துச் செல்லவில்லை?"என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிலரிடம் வினவியபோது "நீர்கொழும்பில் மூன்று நாள்கள் தங்கியிருக்கவேண்டும். ஒருநாள் தங்குமிட செலவுக்கே 8 ஆயிரத்து 500 ரூபா தேவைப்படுகிறது. ஆனால், குறித்த நிதிக்கு ஏற்பாடுசெய்து தரப்படவில்லை. இதன் காரணமாக தேசியமட்டப் போட்டிக்கு வடக்கு மாகாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட இரண்டு வீரர்களை அழைத்துச் செல்லமுடியாது போய்விட்டது" எனத் தெரிவித்தனர். (அ-ஒ-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## பிரதேச செயலகப் பிரதிநிதிகளுடன் விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

நாடளாவிய ரீதியில் பிரதேச செயலக மட்டத்தில் வாடிக்கையாளர் சேவைக் குழுக்களாக நியமிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரதிநிதிகளுடனான விழிப்புணர்வுக் கலந்துரையாடல், நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால், வடக்கு மாகாண உதவிப் பணிப்பாளரின் தலைமையில் யாழ்.மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ப-66)




யாழ்ப்பாணம், ஜூன் 2 மட்டக்களப்பில் வைத்து இனந்தெரியாத நபர்களால்சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளரும் நாட்டுப் பற்றாளருமான ஐயாத்துரை நடேசனின் 20 ஆவது ஆண்டு நினைவுதின நிகழ்வு, வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. (ப-100)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்

## யாழ். மத்திய கல்லூரி

**உயிரியல் விஞ்ஞானப் பிரிவு**
வி. ஆர்த்திகன் - 3ஏ, ரா.சேந்தன் - 2ஏபி, ஜெ. சிந்துயன் - பி 2சி, த.தஸ்வின் 3சி, வி.சாருஜன் சி 2எஸ்,

**பௌதிக விஞ்ஞானப் பிரிவு**
நா. ஹரீஷன்- 3ஏ, ஜெ. அஜய் - 3ஏ, ந. நிருஷன் 2ஏபி, ந. கபீசன் ஏ2பி, சி.சந்தோஷன் - ஏபிசி, டி. டானியல் - பி 2சி, உ. ஜீவதாஸ் பி2எஸ், ஜெ. சண்முகப்பிரியன் 3சி, லெ.சந்தோஷ் - சி 2எஸ், ச. டினிஸ்காந் - சி2எஸ்

## சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்

**கணிதப்பிரிவு**
மகேஸ்வரன் மதுசிகன் - பி2சி,

**வர்த்தகம்**
கஜேந்தினி சிவகுமார் - 3ஏ, புகழ்யா சாந்தகுமார் - ஏபிசி, லியானி ஜெகதீசன் - 3சி

**கலைப்பிரிவு**
ஸ்ரீமுகி குணஸ்ரீ - 2ஏபி, அகல்யா பாஸ்கரன்- ஏ2பி, ஜீவதாஸ் கரோலின்.- ஏபிசி, சிலுவைதாஸ் சுரேகா- ஏபிசி, சத்தியசீலன் கஜானன் - பி2சி, விஜயகுமார் டெல்சிகா பி2சி, சிவரங்கன் சலைக்சியா - பிசிஎஸ், செபஸ்டியாம்பிள்ளை ஜனிஸ்ரன் 3சி, கிருஷ்ணகுமார் கிருத்திகா - 3சி, சுகந்தன் கனிஷ்ரா 3சி, தங்கராசா ஹரிகரன் - 2சிஎஸ், சச்சிதானந்தன் டினுஜன் 2சிஎஸ், சிவராசா தனுஷன் - 3எஸ், டேவிட் மேனகா -3 எஸ்.

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**வர்த்தகப்பிரிவு**
என்.அட்சயன்- 3ஏ, ஏ.சஞ்ஜித்- 3ஏ, ஏ.வி. அபிலாஷ்- 2ஏபி, ஆர்.ஆர்.சி. ஏரியல் ஷெரோன் - 2பிசி, ஆர்.எஸ். மரின்- ஏபிசி, எஸ்.சாம்டெனிஸ்டன்- 2பிசி, எம்.பஸ்ரியன்- 3 பி, பி.கோட்வி ஜோயெல்- ஏபிசி, ஜே.அனோக் - பி2சி, சி.சார்ள்ஸ் அஸ்வின் 2பிசி, ஜெ. ஜெனட் ஜெகிசன்- பி2சி.

**கலைப்பிரிவு**
ஜெ.ஜெமில் -3ஏ, ஜெ.ஹஸ்டன் - 2ஏபி, எஸ்.சமிந்தன் - 2ஏபி, எஸ்.டனிஸ்டன் - 2ஏபி, எ.பிரவீன்ராஜ் - ஏபிசி, எ. அமலதாஸ் - ஏபிசி, ஜெ.நேருசன் - ஏபிசி, ஐ.மிதுன்சன் - ஏபிசி.

**பொறியியல் முறைமைகள் தொழில்நுட்பம்**
பி.ஜி.பெரின் கிறிஸ்காட் - 3ஏ, ஏ. லக்சன் - பி2சி, ஜே.ஜதுசன் -2பிசி, ஜி.ஏ.எச். டினுசன் - 3சி, ஜே.ஏ.யூட் கனிஸ்டன் - 3சி , ஜி.பி.நாராயணன் - 3சி

**உயிரியல் தொழில்நுட்பம்**
பி.அபிராம் - பி2சி, ஜே.வி. ஜெப்ரீ - சி2எஸ்

## வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

**கணிதப்பிரிவு**
மதிமுருகன் பவித்திரன்- ஏ2பி, குலேந்திராஜா அபிஷன்- 2பி சி, மாதங்கி குமார் - 2பிசி, சூரியகாந்தன் மோகனகனன் - 2பிசி, சிவலிங்கம் சுருதிகேசன் - 2பிசி, திலக்சனா தெய்வேந்திரன் - 2பிசி, அஜந்தன் அருளகன் - பி 2சி, மஹிஷாஜினி மகேசன் பி சி எஸ், விதுஷா விக்கினேஸ்வரன் - 2சிஎஸ், டிலக்சனா ரவிக்குமார்- பிசிஎஸ், மயூரிகா ரத்னசிங்கம் - பிசிஎஸ்.

**உயிரியல் பிரிவு**
மாதுஷியா இன்பமதன்- 2ஏசி, ஸ்ரீதரன் ஷைதன்யன் -ஏபிசி, தேவகுமார் ஜிதுசன்- 3பி, சிவனேஸ்வரன் விதுசன் - பி2சி, ஸ்ரீகாந்தன் ஸ்ரீஹரன் - ஏசிஎஸ், சிவசுப்ரமணியம் சாருஜன் - 2சி எஸ், பர்மிஷா சரவணபவானந்தன் - பிசிஎஸ், தேவகுமார் ஜதுசன் - 3சி, யதுஷா கமலநாதன் - 2சிஎஸ்.

**வணிகப் பிரிவு**
பிரியாழினி யோகேந்திரன் - 2ஏ பி, ஆனந்த சித்திரசேனன் கண்ணதாசன் - ஏ2பி, வைஷ்ணவி இராசையா - ஏபிசி, நிகேதா பாலேந்திரன் - 2ஏபி, கஜானி ஜீவகுமார் - பி 2சி, ஜீவிகா ராமச்சந்திரன் - பி2சி, குகதர்சினி சிவநகுலன் - 3சி, காஞ்சனா சேனாதிராசா - 3சி

**கலைப்பிரிவு**
கிந்துஷா ஞானேஸ்வரன்- 3ஏ, திஹாளினி ஜோன் -ஏ 2பி, ஜெனிபர் தவகுமார் - 2ஏ பி, சப்திகா வேவிராசா - ஏ 2பி, திவ்யா சுவேந்திரன் - ஏ2பி, மாதுரிஷா விஜயராஜ்மோகன்- ஏ2பி, காயத்திரி ஆனந்தராசா - ஏபிசி, அஜிதா நவநேசன் - பி 2சி, வேணுசா ரவிக்குமார்- ஏபிசி, நிவ்ஜா கவிதாஸ் - 3பி, துவரகா ஜனார்த்தனன் - ஏபிசி, காந்தசாமி நீபஜன் - 2பிசி, கெனுஜா ரதீஸ் - ஏபிசி, யதுஷா மகேந்திரன் - 2பி சி, உஷாலினி ஜெயரூபன் - 3சி, சபித்ரா தேவராஜ் - 3சி, அபர்ணா சந்திரகுமார் - பிசிஎஸ், நிந்துஷா ரவிச்சந்திரன் - 3சி, தர்சிகா தங்கத்துரை - 3சி, ரதிசனா பவன்குமார் - பி2சி

**பொதுப் பிரிவு**
ராஜேந்திரன் டிசாந்தன் - பி2சி

**உயிரியல் தொழில்நுட்பப் பிரிவு**
சிலோஜினி நகுலன் - ஏ 2பி, ராஜோலினி நந்தகோபால் - ஏ 2பி, விதுஷா விக்கினேஸ்வரன் -ஏபிசி, பிரேமலதா பூரணச்சந்திரன் -3சி

**இயந்திரவியல் தொழில்நுட்பம்**
யோகராசா திருஷன் - ஏபிசி, விக்னேஸ்வரன் வித்யா ஆனந் -3பி, சிவலிங்கம் விபூஷன் - பி2சி.

**உயிர் முறைமைகள் தொழில்நுட்பப் பிரிவு**
வி.ஜீவிதன் - 3ஏ, எஸ்.ஸ்ரோபன்ராஜ் - 3ஏ, ஆர்.டெனிசன் - 2ஏபி, ஏ.பி.ஜொனதன் - ஏ2சி, ஜே.சி. ஒயர்ஸ்டெப் - 3சி, பி.பெனிலோ -3சி

**பௌதிக விஞ்ஞானம்**
கே.கபில்ராஜ்- 3ஏ, ஜே.டபிள்யூ. ஜக்சன் - 3ஏ, எம்.ஸ்ரலன்ராஜ் - 3ஏ, எல்.அபிஸ்லின் - 2ஏபி, கே.ஷெரோன் ரோகித் - 2ஏபி, எம்.எம்.அன்ரன் குருஸ்வன் - 2ஏபி, எஸ்.ஜோன் சார்ள்ஸ் -3பி, ஏ.ஜி.சுபேக்சன் - 2பிசி, ஆர். பேர்ட்லின் -3சி, ஜெ.டினோசன் யூட்ஸ் - 3சி, சி.ஐ. அன்ரன் ஜெர்சியன் - பி2சி, ஜே.ஜே.டிலாஷன் - 3சி, எஸ்.கிரிஷான் -3 சி.

(ச-125,27)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் நிதானம் தேவை. தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படுவதற்கில்லை. அலுவலகப் பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும். காரியங்கள் அனுகூலமாகும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். ஆதாயம் கிடைக்கும். நினைத்த காரியங்கள் வெற்றிகரமாக நிறைவேறும்.

**மிதுனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். வழக்கமான பணிகளிலும் கவனமாக இருக்கவும். எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். பணம் இருப்பதால் செலவுகளை சமாளிப்பீர்கள்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்பு கரையும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். விற்பனையும் இலாபமும் கூடுதலாக இருக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். மனக்குழப்பங்கள் நீங்கி தெளிவு பிறக்கும். உறவினர்களால் ஆதாயம் கிடைக்கும். பிணக்குகள் நீங்கும். மகாவிஷ்ணுவை வழிபட மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** ஆதாயம் கிடைக்கும். அரசாங்க வகையில் காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்:** பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிரச்னைகள் ஏற்படக்கூடும். வியாபாரம் வழக்கம்போல நடைபெறும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். அவ்வப்போது சற்று சோர்வு உண்டாகும். கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கருத்துவேறுபாடு நீங்கும். காரியம் அனுகூலமாக முடியும். பிள்ளைகள் உங்கள் விருப்பப்படி நடந்துகொள்வார்கள். வியாபாரத்தில் இலாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். முயற்சிகள் சாதகமாகும். எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

**மீனம்:** ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது. வீண் செலவுகள் ஏற்படும். முருகப்பெருமானை வழிபடுவது நன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதிகாரத்தை ஆராதித்தல்

இலங்கையில் இடம்பெற்ற 30 ஆண்டுகாலப் போரை வெற்றிகொண்டு பொருளாதாரத்தை முன்னேற்ற முடிந்தமைக்கு, ஸ்ரீலங்கா ஜனாதிபதிக்கு இருந்த நிறைவேற்று அதிகாரங்களே பிரதான காரணம் என்று தெரிவித்திருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. ஸ்ரீலங்காவில், ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும் என்று காலாகாலமாகவே வலியுறுத்தப்பட்டுவரும் நிலையில், நிறைவேற்று அதிகாரத்துக்கு வக்காலத்து வாங்கியிருக்கின்றார் ரணில்.


ஒருநாட்டின் ஜனாதிபதிக்கோ அல்லது பிரதமருக்கோ உலகில் வேறெந்த நாடுகளிலும் இல்லாத அளவுக்கு அதிகாரங்களைக் குவித்துக் கொடுத்திருக்கும் நாடுதான் இலங்கை. அமெரிக்க ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்கள்கூட காங்கிரஸால் கட்டுப்படுத்தப் படுகின்றன. ஆனால், இலங்கை ஜனாதிபதிதான் சர்வமும் படைத்தவராக இருக்கின்றார். இதனால்தான், 'என்னால் ஒரு ஆணை பெண்ணாகவும், ஒரு பெண்ணை ஆணாகவும் மாற்றமுடியாதே தவிர, மற்றைய அத்தனையும் சாத்தியம்' என்று இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதியான ஜே.ஆர். ஜெயவர்த்தன முன்னொரு காலத்தில் குறிப்பிட்டிருந்தார். தன்னை ஜனநாயகவாதியாகவும், சீர்திருத்தவாதியாகவும் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதி ரணில், இப்படியான அர்த்தப் பிறழ்வான அதிகாரக் குவியலுக்கு 21 ஆம் நூற்றாண்டில் வக்காலத்து வாங்குவதெல்லாம் பேரபத்தமே.

ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ச இருந்த காலத்தில் நாடு உச்சக்கட்டப் பொருளாதாரப் பின்னடை வுக்குள் தள்ளப்பட்டது. பாணுக்கு வரிசையில் நிற்கும் யுகமொன்று ஏற்பட்டது. மக்களின் வயிற்றில் பற்றி யெரிந்த வறுமை எனும் பெரும்தீதான் அவர்களை வீதிக்கு அழைத்துவந்தது. விளைவாக, மக்கள் எழுச்சிப் போராட்டங்களால் நாட்டை விட்டு விரட்டப்பட்டார் கோத்தாபய ராஜபக்ச. இந்தப் பொருளாதாரப் பின்னடைவுக்கு, 'நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி' கோத்தாபய ராஜபக்ச மேற்கொண்ட தன்னிச்சையானதும் - நிபுணத்துவத்தைப் புறக்கணித்த துமான முடிவுகள்தான் என்பதை ஜனாதிபதி ரணிலால் மறுக்கமுடியுமா? இந்த மிகை அதிகாரங் களைக் கொண்டு எடுக்கப்பட்ட 'திருத்தி எழுதப்பட முடியாததும், சவாலுக்கு உட்படுத்த முடியாததுமான' அதிகாரங்கள்தான் நாட்டை அதலபாதாளத்துக்குள் தள்ளியிருக்கின்றன. இதை ஜனாதிபதி ரணிலே முன்னொரு நேரத்தில் ஏற்றிருக்கையில், தற்போது அவர் தன் நிலைப்பாட்டிலிருந்து முற்றாகத் திரும்புவதன் நோக்கம்தான் என்ன?

சமஷ்டி முறையையும், மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களையும் நாட்டின் அதியுச்ச அதிகாரப் பீடங்களுக்கு வழங்கியிருக்கும் எத்தனையோ நாடுகள் இன்று தம் பாதுகாப்பை மிகையாக உறுதிப்படுத்தி அசைக்கமுடியா அரண்களாக இருக்கின்றன. அவற்றின் பொருளாதாரமும் பலமாகவே இருக்கின்றது. அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து, சுவிற்ஸர்லாந்து, டென்மார்க், சுவீடன் என்றவாறாக இதற்கான உதாரணப் பட்டியல் நீட்சியுறும்.

அதிகாரங்களை இறுகப்பற்றுவதையும், குவித்து வைத்திருப்பதையும் விடுத்து, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுகளையும், வேண்டப்படும் சில தளர்வுப் போக்குகளையும் வழங்குவதன்மூலம் நாட்டின் பாதுகாப்பும் மேம்படும், பொருளாதாரமும் வளம் பெறும், நல்லிணக்கமும் பலப்படும்.








# சம்பள அதிகரிப்புக்கு அரசிடம் பணமில்லை

## அமைச்சர் பந்துல கைவிரிவிப்பு

**கொழும்பு, ஜூன் 2**

**எவருக்கும் இந்த ஆண்டில் சம்பள அதிகரிப்புச் செய்யமுடியாது. அரச செலவினங்களை முகாமைத்தும் செய்வதற்குக்கூட அரச வருமானம் போதுமானதாக அமையவில்லை. நாடு இன்னமும் வங்குரோத்து நிலையிலிருந்து மீளவில்லை என்பதை அனைவரும் முதலில் விளங்கிக்கொள்ளவேண்டும்.**

-இவ்வாறு நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சம்பள அதிகரிப்புக் கோரி எவர் போராட்டத்தில் ஈடுபட்டாலும் இந்த ஆண்டு சம்பளம் அதிகரிக்க முடியாது.

ஒரு துறையினருக்கு சம்பளத்தை அதிகரித்தால் பிறிதொரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையில் உள்ள நிலையில் சகல அபிவிருத்திப் பணிகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு வெற்றி பெற்றால் மாத்திரமே அபிவிருத்திப் பணிகளைத் தொடரமுடியும். குறுகிய அரசியல் நோக்கத்துக்காக தற்போதைய மறுசீரமைப்புகளை மாற்றியமைத்தால் ஒரு வாரம் கூட நாட்டை நிர்வகிக்க முடியாது - என்றார். (ச-இ)

# மீண்டும் திரிபோஷ

கொழும்பு, ஜூன் 2

'திரிபோஷ' உற்பத்திக்கு சுகாதார அமைச்சு மீண்டும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அதற்கமைய 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான சிறார்களுக்கு நிபந்தனைகளுடன் மீண்டும் திரிபோஷ பயன்படுத்த அனுமதிக்கப் படும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

# கப்ராலுக்கு விடுதலை

கொழும்பு, ஜூன் 2

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உட்பட 5 பிரதிவாதிகளை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2012 ஆம் ஆண்டு கிரேக்கப் பத்திரங்களின் முதலீடு மூலம், அரசாங்கத்துக்கு 1.84 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தினர் என இவர்கள் மீது குற்றஞ்சுமத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# முதியோர் கொடுப்பனவில் மாற்றமில்லை

'அஸ்வெசும' நலன்புரித் திட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வரும் நிலையில் இதுவரையில் வழங்கப்பட்டு வந்த முதியவர்களுக்கான கொடுப்பனவு நிறுத்தப்படுமென வெளியாகும் தகவல்கள் உண்மைக்கு புறம்பானவை என்று நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது. தொழில்நுட்ப காரணங்களால் மே மாதக் கொடுப்பனவுகளை வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஜூன் மாதம் இரண்டாம் வாரத்தின் பின்னர் பிரதேச செயலகங்களில் வழமையான முறையில் முதியவர்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# பாதாளக்குழு 10 பேர் கைது

கொழும்பு, ஜூன் 2

பாதாள உலக செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின்போது பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த மேலும் 10 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சுற்றிவளைப்பில் இதுவரை பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஆயிரத்து 299 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## நாளை

03.06.2024
**திங்கட்கிழமை**
**வைகாசி - 21**

சுபநேரம் : 11.52 - 01.22
ராகுகாலம் : 07.22 - 08.52

## நாளொரு நல்வார்த்தை

**அரிய செயல்கள் அனைத்தும்**
**விடாமுயற்சியாலே அடையப் பெற்றிருக்கின்றன.**
**வெறும் வலிமையால் மட்டும் அல்ல.**

**- சாமுவேல் ஜோன்சன்-**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org


சிவசக்தி லக்சிகா வெற்றிவேல் ஜனுபா நவனீதன் கௌதமன்

# வாழ்வக மாணவர்கள் 3 பேர் சிறந்த பெறுபேறு

யாழ்ப்பாணம், ஜூன் 2
வெளியாகியுள்ள க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் வாழ்வகத்தைச் சேர்ந்த 3 மாணவர்கள் அதியுயர் பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

சிவசக்தி லக்சிகா தமிழ், இந்து நாகரிகம், அரசியல் விஞ்ஞானம் ஆகிய மூன்று பாடங்களில் 3 ஏ சித்தி பெற்று மாவட்ட மட்டத்தில் 97 ஆவது இடத்தைப் பெற்றுள்ளார்.

வெற்றிவேல் ஜனுபா கர்நாடக சங்கீதத்தில் ஏ சித்தியும் தமிழ் சி, அரசியல் விஞ்ஞானம் எஸ் பெறுபேற்றை பெற்றுள்ளார்.

நவனீதன் கௌதமன் இந்து நாகரிகம், தமிழ் ஆகிய பாடங்களில் சி சித்தியும் அரசியல் விஞ்ஞான பாடத்தில் எஸ் சித்தியும் பெற்றுள்ளார். (ச-66)

## யாழில் கணிதப் பிரிவில்

# மீசாலை வீரசிங்கம் மாணவன் முதலிடம்



யாழ்ப்பாணம், ஜூன் 2
2023 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்றுமுன்தினம் வெளியான நிலையில் யாழ்ப்பாணம் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் மதியழகன் டினோஜன் கணிதப்பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதலாமிடத்தையும் அகில இலங்கை ரீதியில் 47 ஆவது இடத்தையும் பெற்றுப் பொறியியல் பீடத்துக்குத் தெரிவாகியுள்ளார். (ச-66)



# உயிரியல் விஞ்ஞானத்தில் வேம்படி மாணவி முதலிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 2
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை மாணவி தாரங்கா குகதாஸ் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3ஏ சித்தி பெற்று யாழ். மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். (ச)

# மெதடிஸ்த பாடசாலை 9 மாணவிகள் '3 ஏ'

யாழ்ப்பாணம், ஜூன் 2
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மாணவிகள் தலா 9 பேர் 3ஏ மற்றும் 2ஏபி சித்திகளைப் பெற்றுள்ளனர். உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 3 மாணவிகள் 3 ஏ சித்தியும் 4 மாணவிகள் 2 ஏபி சித்திகளையும் பெற்றுள்ளனர்.

கணிதப்பிரிவில் (பௌதிக விஞ்ஞானம்) 3 மாணவிகள் 3ஏ சித்தியும் ஒருவர் 2ஏபி சித்தியையும் பெற்றுள்ளனர்.

கலைப்பிரிவில் 3 மாணவிகள் 3ஏ, 3 மாணவிகள் 2ஏபி சித்திகளையும் வணிகவியல் பிரிவில் மாணவி ஒருவர் 2ஏபி சித்தியையும் பெற்றுள்ளனர். (ச-100)

# வவு.சைவப்பிரகாசவில் 7 மாணவர்கள் '3 ஏ'

வவுனியா, ஜூன் 2
வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் 7 மாணவர்கள் 3 ஏ சித்தியை பெற்றுள்ளனர். கலைப்பிரிவில் 6 மாணவர்கள் 3 ஏ சித்திபெற்று மாவட்ட மட்டத்தில் 3 மற்றும் 5 ஆம் நிலைகளை பெற்றுக்கொண்டுள்ளனர்.

வர்த்தகப் பிரிவில் மாணவி ஒருவர் 3 ஏ சித்திபெற்று மாவட்டத்தில் இரண்டாம் நிலையைப் பெற்றுள்ளார். இதே பிரிவில் நான்கு மாணவர்கள் 2ஏபி சித்திகளைப் பெற்றுள்ளனர்

உயிரியல்விஞ்ஞான பிரிவில் மாணவி ஒருவர் ஏபிசி சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 14 ஆம் இடத்தை பெற்றுள்ளார். (ச-110)

# கோமரசன்குளம் ம.வி. இரு மாணவர்கள் '3ஏ'

வவுனியா, ஜூன் 2
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலயத்தில் இரண்டு மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

வர்த்தகப்பிரிவில் கே.தனுஜா மற்றும் எஸ்.டென்சிகா ஆகிய மாணவிகளே 3ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முறையே 7 மற்றும் 16ஆம் நிலையை அடைந்துள்ளனர்.

அத்துடன் கலைப்பிரிவில் மூன்று மாணவர்கள் 2ஏபி சித்திகளைப் பெற்றுள்ளனர். (ச-110)

## யாழ்.மாவட்டத்தில்

# யாழ். இந்து மகளிர் மாணவி வணிகவியலில் முதலிடம்!



யாழ்ப்பாணம், ஜூன் 2
வெளியாகியுள்ள க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரி மாணவி கிர்த்திகா பத்மலோஜன் வணிகவியல் பிரிவில் யாழ். மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்று சாதனைபடைத்துள்ளார்.

யாழ். இந்து மகளிர் கல்லூரியிலிருந்து பரீட்சைக்குத் தோற்றிய வர்களில் 90 மாணவிகள் விஞ்ஞான, கலை, வணிகவியல் துறைகளில் சிறப்புப் பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகியுள்ளனர். வணிகவியலில் முதலாம் நிலை மற்றும் கலைத்துறையில் ஐந்தாம் இடம் உட்பட 24 பேர் 3ஏ சித்திகளையும், 18 பேர் 2ஏபி சித்திகளையும், 6 பேர் 2ஏசி சித்திகளையும் பெற்றுள்ளனர். (ச-125)

# விக்ரோறியாவிலிருந்து மருத்துவபீடத்துக்கு 3 மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 2
2023 ஆம் ஆண்டுக்கான க.பொ.த. உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளில் சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் 3 மாணவர்கள் மருத்துவபீடத்துக்குத் தெரிவாகியுள்ளனர். அதன்படி அ. லக்ஷிகா, யோ. யக்சயன், கு. மிதுனன் ஆகியோரே 3ஏ பெற்று மருத்துவபீடத்துக்குத் தெரிவாகியுள்ளனர். (ச-125)

# இறம்பைக்குளம் ம.வி. மாணவிகள் விஞ்ஞானப்பிரிவில் முதல்நிலை

வவுனியா, ஜூன் 2
வெளியாகியுள்ள உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் விஞ்ஞானப் பிரிவில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மாணவிகள் மாவட்ட மட்டத்தில் முதல்நிலை சித்திகளை பெற்றுள்ளனர்.

உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் 4 மாணவர்கள் 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் முதல் நான்கு இடங்களைப் பெற்றுள்ளனர். அத்துடன் 8 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் 20ஆம் நிலைக்குள் சித்தியடைந்துள்ளனர்.


வர்த்தகப் பிரிவில் 4 மாணவர்கள் 3 ஏ சித்திகளையும் ஒரு மாணவி மாவட்ட மட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளனர். அத்துடன் 4 மாணவர்கள் மாவட்டமட்டத்தில் முதல் 20 இடங்களுக்குள் தெரிவாகியுள்ளனர்.


கணிதப் பிரிவில் ஒரு மாணவி 3 ஏ சித்திகளைப் பெற்று மாவட்ட மட்டத்தில் 5ஆம் நிலையும் 6 மாணவர்கள் மாவட்ட மட்டத்தில் முதல் 20ஆம் நிலைகளில் சித்தியடைந்துள்ளனர். கலைப்பிரிவில் ஒரு மாணவி 3 ஏ சித்தியைப் பெற்று மாவட்டமட்டத்தில் 23 ஆம் நிலையை அடைந்துள்ளார். (ச-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவுப் பிரதேசத்துக்கான பிறப்பு, இறப்பு மற்றும் விவாகப்பதிவாளராக கு.சியானந்தன் நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்.மாவட்டப் பதில் மாவட்டச் செயலர் ம.பிரதீபனால் இவருக்கான நியமனம் வழங்கி வைக்கப்பட்டது. (ப-66)





உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு மண்டைதீவு பிரதான வீதிக் கடற்கரைப் பிரதேசத்தில் கண்டல் தாவரங்கள் நடப்பட்டுள்ளன. நிகழ்வில் வேலணைப் பிரதேச செயலர் க.சிவகரன், சமூக செயற்பாட்டாளர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம-25-66)







சுற்றுச்சூழல் வாரத்தை முன்னிட்டு, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அண்மையில் மரநடுகைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. (ம-25-113)



தேசிய போதை எதிர்ப்பு வாரத்தை முன்னிட்டு, கிளிநொச்சி மாவட்டச் செயலக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில், மாவட்ட பதில் சமுர்த்தி பணிப்பாளர் அ.கேதீஸ்வரன் தலைமையில், கொடி தின அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில், பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார். (ம-25-113)



நீர்வேலி தெற்கு ஞான வைரவர் ஆலயத்தின் வைகாசிப் பொங்கல் உற்சவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன் போது அடியவர்கள் மடை பரவி வழிபாட்டில் ஈடுபட்டனர். (ச-17)



உணவுப் பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார அவசர உதவித் திட்டத்தின்கீழ், ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையில், பச்சிலைப்பள்ளி மற்றும் பூநகரி ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளில் தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கான உளவள பயிற்சிநெறி அண்மையில் இடம்பெற்றது. (ம-25-113)

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி செல்வா முன்பள்ளி மழலைகளின் ஆக்கப்பொருள்கள் காட்சிப்படுத்தலும் வேடந்தாங்கல் நிகழ்வும் முன்பள்ளி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. (ச-9)







மருதம்பதி நுண்கலைக் கல்லூரியின் அங்குரார்ப்பண நிகழ்வு, 'பொன்னம்மா உதவும் கரங்கள்' பணிப்பாளர் க.கங்காதரன் தலை[illegible]யகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது.



எழுத்தாளரும், ஊடகவியலாளருமான அலெக்ஸ் பரந்தாமனின் 'கடலலைகளை மேவிய கதை' நாவல் அறிமுக நிகழ்வு, கலாபூஷணம் ந.இராமநாதன் தலைமையில் விசுவமடுவில் அமைந்துள்ள மத்திய சனசமூக நிலைய மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. (ம-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குருதிக்கொடை முகாம்

கொக்குவில், ஜுன் 2

மனோன்மணி சனசமூக நிலைய நிர்வாகம் முன்னெடுத்துள்ள, வருடாந்த குருதிக்கொடை முகாம் நிகழ்வு, மனோன்மணி சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பி.ப. 2.30 மணி வரை இடம்பெறவுள்ளது.

(ப-66)


## காணி விற்பனைக்கு

நாவலர் வீதிக்கும். கண்டி வீதிக்கும் அருகில் உள்ள நிலப்பரப்பு 1 1/2 கொண்ட **வீட்டுடன் கூடிய காணி உடன் விற்பனைக்கு உண்டு.**

விலை :- 3 கோடி 80 லட்சம் .

தரகர் தேவையில்லை

**077 408 0578, 077 855 6382**

(CR/42552) J-1

## வேலையாள் தேவை

சுன்னாகத்தில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கியிருந்து சிறிய குடும்பத்திற்கு சமையல் மற்றும் வீட்டு வேலைகளை செய்யக்கூடிய 45 - 60 வயதிற்கு உட்பட்ட பெண் தேவை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

**077 235 3877**

(CS/53246) J-1

## விற்பனை பிரதிநிதி தேவை

மானிப்பாயில் உள்ள எங்கள் சில்லறை மற்றும் மொத்த விற்பனை கடைக்கு விற்பனை பிரதிநிதி தேவை.

**வேலை பொறுப்புகள்:**

- குறைந்தபட்ச இருப்பை பராமரிக்க வேண்டும்.
- புதிய விநியோகஸ்தர்களைத் தேடி. சிறந்த விலையில் பொருட்களைப் பெற வேண்டும்.
- சந்தை விலையை பகுப்பாய்வு செய்ய வேண்டும்.
- மொத்த வியாபாரத்திற்கான புதிய வணிகச் சந்தைக்கான வாய்ப்பை உருவாக்குதல்.
- வாடிக்கையாளர்கள் கோரும் பொருட்களை எடைபோட்டு கொடுக்க வேண்டும்.

**கல்வித்தகமை : A/L** தகுதியுடன் கணினி அறிவு.

**தொடர்புகளுக்கு:- 074 363 1559**

(CS 638) A-1

## தேவை

பகுதி நேரமாக தோட்ட வேலை செய்யகூடியவர் தேவை.

தொடர்பு: **077 993 8348**

## கடை வாடகைக்கு உண்டு

யாழ் நகர் K.K.S வீதியில் கடை வாடகைக்கு உண்டு.

22x11 கீழ்த்தளம், மேல்த்தளம்.

**077 345 0039, 075 348 0072**

## காணிகள் விற்பனைக்கு

பூநகரி மண்ணித்தலையில் 10 ஏக்கர் காணியும் (தென்னை வைப்பதற்கும் மற்றும் பண்ணைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்) மறவன்புலவு பகுதியில் 60 பரப்பு நெற் காணியும் உடன் விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு: 077 193 3490**

## ஊர்காவற்றுறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) ஊர்காவற்றுறை

ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கத்திற்குச் சொந்தமான, ஊர்காவற்றுறை பிரதான வீதியில் அமைந்துள்ள ஐந்து கடைத் தொகுதிகளில் மூன்றாம் இலக்க கடை வாடகைக்கு விடப்படும். தேவையானவர்கள் சங்க அலுவலக நேரத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி :- 20.06.2024**

குறிப்பு:- அலுவலக நேரம் கிழமை நாட்களில் காலை 8.30 மணி - மாலை 5.00 மணி வரை

**தொலைபேசி இல :- 021 221 1648**

**பொதுமுகாமையாளர்**
**ஊர்.ப.நோ.கூ.சங்கம்.**
**ஊர்காவற்றுறை**

(CR/42553) J-1


## மரண அறிவித்தல்

மலர்வு 20 . 01 . 1961



உதிர்வு 01 . 06 . 2024

### அமரர் மயில்வாகனம் ரோகினி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் ரோகினி நேற்று (01.06.2024) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கணபதிப்பிள்ளை மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் பகீரதன் (பிரான்ஸ்), ரசீதரன், தர்மினி (கனடா), யசிதரன், சர்மினி ஆகியோரின் அன்புத் தாயாரும், நிஷாந்தன் (கனடா), தசாளினி (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும் அக்சரண் (கனடா), மகிழினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கதிரவேலு (கனடா), இராசலிங்கம் (கனடா), நடேசலிங்கம் (கனடா), சுபத்திராதேவி (சுவிஸ்), விரூபி **(DS Office Nallur)** ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தச்சன்புட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 07 . 1959



மறைவு 31 . 05 . 2024

### அந்தோனிப்பிள்ளை இளங்கோ

(Retired Purchasing Officer, University of Jaffna)

இல 19/1A இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாக கொண்ட அந்தோனிப்பிள்ளை இளங்கோ நேற்றுமுன்தினம் (31.05.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை மற்றும் யேசுமலர் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - புஸ்பராணி தம்பதியரின் அன்பு மருமகனும், திருவருட்செல்வி (Nursing Officer, Jaffna Teaching Hospital) அன்புக் கணவரும், மெர்லின் ஜோதினியின் (Gr 11, Vembadi Girls High School) பாசமிகு தந்தையும், மதியழகன் (Retired Security Officer, University of Jaffna) அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் White Houseல் (Main Street, Jaffna) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதி ஆராதனை நாளை (03.06.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் புனித திருமுழுக்கு யோவான் ஆலயத்தில் (Opposite of US Hottel) ஒப்புக் கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக அளவெட்டி புனித செபஸ்ரியார் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

(CS/633) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**STUDENT VISA | TOURIST VISA**
**BUSINESS VISA**
UK, CANADA & SCHENGEN COUNTRIES




IELTS உடன் மற்றும்
IELTS இன்றி

0763 915 660 | 0117 005 877
0763 915 660
info@europelinkedu.com
www.europelinkedu.com

# வேலைவாய்ப்பு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் இயங்கிவரும் பலசரக்கு வர்த்தக நிலையத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. காசாளர் (Cashier)
   - ✓ (2 வருட அனுபவமுள்ளவர்கள்)
   - ✓ (அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிலிருந்து ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது.)
2. வாகனசாரதி (Driver)
3. Computer Billing, பொதி செய்து கொடுத்தல்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு:-T.P: 077 419 5015**
**021 221 2770**

(CS 55228) A-1

# வேலைவாய்ப்பு

**கல்வி சார் ஊழியர்கள்**

எமது பாடசாலையில் பின்வரும் வேலைவாய்ப்பு காணப்படுவதால் தகுதியான ஆங்கில மொழி மூல விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கலாம்.

- ➤ கணக்கீடு - **Accounting** (E.Medium)
- ➤ பொருளியல் - **Economics** (E.Medium)
- ➤ வணிகக்கல்வி - **Business Studies** (E.Medium)
- ✓ இடம் :- உடுவில் மகளிர் கல்லூரி
- ✓ காலம் :- 03.06.2024 - 07.06.2024
- ✓ நேரம் :- காலை 8.30 - மதியம் 1.00

Principal

(CR42545) J-1

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பலாலி வீதி, கலட்டி முத்தலை ஒழுங்கையில் ஒரு பங்கு கிணறுடன் கூடிய **நான்கு (4) பரப்புக் காணி விற்பனைக்கு.**

விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:-
தவமலர், சுதாகர் **076 778 8927**

(CS/28499) J-1

# மணமகள் தேவை

யாழ் இந்து (V) 1993
**வங்கியில் உயர்பதவியிலுள்ள கொழும்பில் வசிக்கும் மணமகனுக்கு மணமகள் தேவை.**

**075 863 1281**

(CS72230) J-1

# விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கை, பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்தான், ஏலக்காய், சீதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், றெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஐந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

# வீட்டுடன் காணி விற்பனைக்கு

பருத்தித்துறை தம்பசிட்டியில் 1 1/4 பரப்புக் காணியில் நவீன முறையில் திருத்தியமைக்கப்பட்ட 4 அறைகளைக் கொண்ட வீடு வெட்டுக்கிணறுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: **+ 4799 043150**


(CS 55204) N-1

ஈழத்து கைலாய ஜோதிட நிலையம்
**அம்மன் அருள் வாக்கு**

தினமும் காலை : 9.00 - 12.00 மணிவரை
மாலை : 3.00 - 05.00 மணிவரை

- ◆ குழந்தைப் பாக்கியம் கை கூடவில்லையா?
- ◆ கணவன் - மனைவி பிணக்கா ?
- ◆ பிரிவால் வேதனையா? தொழில் பிரச்சினையா?
- ◆ வாழ்வில் முன்னேற்றம் இல்லையா?
- ◆ மாங்கல்ய பாக்கியம் கை கூடவில்லையா?

அனைத்திற்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
**திருமதி வே. மோகனதாஸ்**
Accurate Laboratory (1ம் மாடி)
இல.77, கண்டி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: **071 241 1234, 021 221 1239**



# ரொபேட் பிகோவின் உடல்நிலை முன்னேற்றம்

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான, ஸ்லோவாக்கியப் பிரதமர் ரொபேட் பிகோவின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்லோவாக்கியப் பிரதமர் ரொபேட் பிகோ கடந்த மாதம் 15ஆம் திகதி, அமைச்சரவைக் கூட்டமொன்றில் கலந்து விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

20 மருத்துவர்களைக் கொண்ட குழுவினர் அவருடைய உடல்நிலையை இரவு, பகலாகக் கண்காணித்துவந்த நிலையில், தற்போது ரொபேட் பிகோவின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவக் குழு அறிவித்துள்ளது. (ம)

# அராலியில் இன்று அறவழிப் போர்!

ஏழை மக்களின் பசுக்கள், மாடுகள் களவாடப்பட்டுச் சட்டவிரோதமான முறையில் இறைச்சிக்காகப் படுகொலை செய்யப்படுவதை அரசாங்கம் நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி அராலியில் இன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. உருத்திரசேனை அமைப்பு அராலி தெற்கு வாழ்பொது மக்களுடன் இணைந்து இன்று முற்பகல் 10 மணியளவில் அராலி கரைப்பிட்டி கணபதீஸ்வரர் பிள்ளையார் ஆலயத்துக்கு அருகாமையில் இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளது.

(ம-66-26)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



கடந்த 15.05.2024 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

## அமரர் கமலாம்பிகை அப்புத்துரை

திதி : ஏகாதசி

அன்னாரின் முதலாவது நினைவு அஞ்சலி இன்று (02.06.2024) குரோதி வருடம் ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் செட்டித் தெரு இல்லத்தில் கிரிகைகள் நடைபெறும். தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(CS/55237) J-1

"திருப்பதி"
82/28, செட்டித்தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12 . 03 . 1951 | 31 . 05 . 2024 |



## திருமதி கனகரத்தினம் இராஜலட்சுமி

முருகன் வீதி, உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் 4 ஆம் ஒழுங்கை கோப்பாய் வீதி, உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரத்தினம் இராஜலட்சுமி நேற்று முன்தினம் (31.05.2024) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - பூபதி தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், கஜந்தன் (மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்), மதுசியன் (ஜேர்மன்), ஜானு, சோபிதா (ஜேர்மன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றஜிதா, தர்மினி, சுஜீவன், ராஜ்குமார் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்றவர்களான மகாலட்சுமி, நவலட்சுமி, சண்முகநாதன், தனலட்சுமி ஆகியோரின் அன்புத் தங்கையும், காலஞ்சென்றவர்களான இராமநாதன், தவராஜா, பவளம், சபாரத்தினம் மற்றும் தர்மரத்தினம், விஜயரத்தினம், மனோரஞ்சினி, கலாரூபி, செல்வரத்தினம், காலஞ்சென்ற பஞ்சரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், மிதுன், தனுஸ்கா, பிரணுஸ்கா, மாணுஸ்கா, டணுஸ்கா, சாஜீஸ், கவீஸ், கஜீஸ், கஜீஸா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (05.06.2024) புதன்கிழமை காலை 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: கணவர்**
(முன்னைய பூந்துகில் ரெக்ஸ்ரைல் - உரிமையாளரும்,
வெண்புறா மினிபஸ் - உரிமையாளரும்)

(cs 55211) N-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஆயுதங்களால்

# ரஷ்ய இலக்குகளைத் தாக்க உக்ரைனுக்கு அனுமதியாம்!



**வொஷிங்டன், ஜூன் 2**

**அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, ரஷ்ய இலக்குகள் மீது தாக்குதல் நடத்த உக்ரைனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.**

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முயற்சிகளையடுத்து, உக்ரைன் மீது போரை அறிவித்த ரஷ்யா கடந்த இரண்டு வருடங்களாக இந்தப் போரை முன்னெடுத்துவருகின்றது. இந்தப் போரில் அமெரிக்காவின் ஆயுதங்களே உக்ரைனுக்கு முதுகெலும்பாக இருந்தன. எனினும், தற்காப்பு நடவடிக்கைக்காகத்தான் தனது ஆயுதங்களைப் பயன்படுத்தவேண்டும் என்றும், ரஷ்ய இலக்குகளைத் தாக்கக்கூடாது என்பதும் அமெரிக்காவின் உத்தரவாக இருந்தது. போர்ப் பிராந்தியத்தை விட்டு விரிவுபடாமல் இருப்பதற்கு இந்த உத்தரவு அவசியம் என்பதே அமெரிக்காவின் முடிவுக்குக் காரணம் என்று சுட்டிக்காட்டப் பட்ட நிலையில், தற்போது அமெரிக்க ஆயுதங்களைப் பயன்படுத்தி, ரஷ்ய இலக்குகள் மீது தாக்குதல் நடத்தஉக்ரைனுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால், உக்ரைனிடமிருந்து ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அவ்திவ்கா மற்றும் கார்கீவ் பிராந்தியங்களுக்கு அருகிலுள்ள ரஷ்ய இலக்குகளையே தாக்க வேண்டும் என்றும் அமெரிக்கா நிபந்தனை விதித்துள்ளது.

(ம)


## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
21.11.1977 இல் பிறந்த
**மணமகனுக்கு மணமகள் தேவை.**
உத்தரட்டாதி நட்சத்திரம், மீனம் ராசி,
சொந்தமாக கடை உரிமையாளர்.
(CS/635) J-1

**T.P. 076 860 5172**

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு
அண்மையில்
மூன்று பேர் கொண்ட சிறிய
குடும்பம் ஒன்றிற்கு
**வீடு வாடகைக்குத் தேவை.**
(CS/55216) J-1

தொடர்பு:- **077 247 4571**

## முகவர்கள் தேவை

**இலங்கையில் முன்னணி இனிப்பு பண்டங்கள் (Toffee) தயாரிப்பு நிறுவனத்திற்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் முகவர்கள் தேவை.**

**தகைமைகள்**

- வங்கி உத்தரவாதம்
- விநியோக சிறியரக வாகன வசதி
- விநியோக துறையில் முன் அனுபவம் இருத்தல் வேண்டும்.

**SAS INTERNATIONAL (PVT) LTD**
100, Convent Road, Hendala, Wattala.
0777 901628 | 074 1007438


### தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

மேற்படி கூட்டமானது எதிர் வரும் 16.06.2024 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு சங்கப் பணிமனையில் நடைபெற இருப்பதால் உரிய நேரத்துக்கு சகல அங்கத்தவர்களையும் வருகை தருமாறு மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**இணைச் செயலாளர்**


## காணி விற்பனைக்கு

கரவெட்டி மத்தி, சரஸ்வதி வித்தியாலய
ஒழுங்கையில் அமைந்துள்ள 94 பனைகள்
உள்ள 18 பரப்புக் காணி (யாழ் மாவட்ட
நிதிமன்றத்தால் பிரிவிடுதல் செய்யப்பட்டது)
விற்பனைக்கு உண்டு. காணிக்கு
இருபக்கமும் பாதைகள் உள்ளன.
(CS/28434) J-1

**077 937 7842, 076 032 1084**

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் அமைந்துள்ள
உயர்தர உணவகத்திற்கும்,
சுப்பர் மார்க்கற்றுக்கும்
பின்வரும் பணியாளர்கள் தேவை.

- றொட்டி சிற்றுண்டி தயாரிப்பாளர்
- நாண், பேப்பர் தோசை தயாரிப்பாளர்
- காசாளர்
- உணவு பரிமாறுபவர்(பெண்கள் மட்டும்)

(CS/28412 B) J-1

தொடர்பு:- **077 600 0373**

## விசா ஆலோசனை சேவை

ஐரோப்பிய நாடுகளான போலாந்து, ருமேனியா,
இத்தாலி, பிரான்ஸ் நாடுகளுக்கும், லண்டன், கனடா,
நியூஸிலாந்து, அவுஸ்ரேலியா, அமெரிக்கா, யப்பான்,
தென்கொரியா நாடுகளுக்குமான விசிட், Work,
Student, Family விசாக்களுக்கான உடனடி
ஆலோசனைகளுக்கு எம்மைத்
தொடர்பு கொள்ளுங்கள்.
இல. 69, பலாலி வீதி, திருநெல்வேலி- யாழ்ப்பாணம்,
குருமன்காடு - வவுனியா,
வெள்ளவத்தை - கொழும்பு.
(CS/28412A) J-1

**077 604 0373, +44 7460 720 270**

## காணி விற்பனைக்கு

கோப்பாய் பெற்றோல்
நிலையத்திற்கு முன்பாக உள்ள
ஒழுங்கையில் (800m தூரத்தில்)
**2 பரப்பு வெற்றுக்காணி
விற்பனைக்கு**
(CS/55012) J-1

**076 089 8877**


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
18 . 06 . 1938

மறைவு
03 . 05 . 2024



**திருமதி**

## சண்முகலிங்கம் மகேஸ்வரிப்பிள்ளை

நாட்கள் 31 கடந்தாலும் ஆறிடுமோ
உங்கள் நினைவலைகள்
காற்றுப்போல் கண்களுக்கு தோன்றாமல் நிற்கின்றீர் - அம்மா
தோற்றுப் போனது அம்மா எம் எதிர்பார்ப்பு எல்லாம்
காலங்கள் பல சென்றாலும் கடைசிவரை உங்கள் நினைவு
எம் நெஞ்சை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும் தொலைபேசியூடாகவும், முகநூல் மூலமும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், மலர்வளையங்கள், மலர்மாலைகள் சாத்தியவர்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைத்து உள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**அல்லாரை வடக்கு,
மீசாலை.**


(cr.42550) (N-1)

**தகவல்:
குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு
19 . 10 . 1949

இறப்பு
31 . 05 . 2024



# முருகேசு பாலசிங்கம்

யாழ்ப்பாணம் சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு பாலசிங்கம் நேற்றுமுன்தினம் (31.05.2024) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிவகாமன் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற கணபதிப்பளை - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மருமகனும், ரதிகுமாரியின் அன்புக் கணவரும், தேவராசா (நுவரேலியா), காலஞ்சென்ற கதிராசிப்பிள்ளை மற்றும் சின்னம்மா, சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், திவ்வியா (இங்கிலாந்து), திவிசியா ஆகியோரின் அன்புத் தந்தையும், குகதாஸன் (இங்கிலாந்து), நிதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரணி, கர்ஷின், கிருசான், கிசானிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணியளவில் சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.**

(cr 42551) (N-1)

**தகவல்:
குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## தமிழ்ப்...

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சி.வீ.கே.சிவஞானம் மேலும் தெரிவித்ததாவது:-

நான் பொதுவேட்பாளருக்கு மாறானவன். பொதுவேட்பாளர் தேவையற்றது என எங்களுடைய அரசியல்வாதிகளுக்குள்ளேயே முதன்முதலில் கருத்துச்சொன்னவன். பொதுவேட்பாளர் சாத்தியமில்லை என்றும் அதற்கான காரணங்களையும் நான் கூறியிருக்கிறேன். பொதுவேட்பாளர் யார் என்ற தெரிவிலேயே அந்தவிடயம் முடங்கும். கடந்தகால தேர்தல்களில் நாங்கள் நிரூபித்து வந்த மக்கள் ஆணை மலினப்படுத்தப்படும் என்ற கருத்தையும் கூறிக்கொள்கிறேன். ஆனால், ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்குத்தான் இவர்கள் பொதுவேட்பாளரை முன்வைத்தார்கள் என்ற கருத்தில் நான் உடன்படவில்லை. இந்த பொதுவேட்பாளர் விடயத்தை முதலில் பேசியது சுரேஷ் பிரேமச்சந்திரன் தான். அது அவரது நியாயமான கருத்து. அதனை நான் பிழை என்று சொல்லவில்லை. அதில் நான் உடன்படவே இல்லையே ஒழிய ரணிலை ஜனாதிபதியாக்கும் கருத்து நிலைப்பாட்டோடு சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனை முன்னெடுத்திருப்பார் என்ற எண்ணம் எனக்கில்லை.

தமிழரசுக் கட்சியைப் பொறுத்தவரையில் கட்சிரீதியாக இதுவரையில் எந்த முடிவையும் அறிவிக்கவில்லை. ஆனாலும் கட்சி உறுப்பினர்கள் தனித்தனியே இதுபற்றி பேசிவருகிறார்கள். இந்தவிடயம் தொடர்பில் சில வாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற கட்சியின் மத்திய செயற்குழுவில் நாங்கள் பேசியிருந்தோம்.

இந்தவிடயத்தில் கட்சிக்குள்ளும் இரண்டு கருத்துகள் இருந்தன. அப்படி தொடர்ந்தும் இருக்கும். இல்லாமலும் போகலாம். கட்சி முடிவெடுக்காமல் இருக்கிறபோது கட்சி என்று சொல்லி சிலபேர் தனித்தனியாகவும் பேசியிருக்கலாம். இந்த விடயத்தில் தமிழரசுக் கட்சியை பணிய வைக்கலாம் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். இவரைப் போல எத்தனையோ பேரை நாங்கள் கண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல யாழ்ப்பாண மக்களை உசுப்பேற்றி பணிய வைப்பதாகவும் கூறியிருக்கிறார். அப்படி உசுப்பேற்றி யாழ்ப்பாண மக்களை பணிய வைக்க முடியுமா? உசுப்பேத்தி எங்கள் மக்களை எதுவும் செய்யலாம் என்று யாரும் சொல்வது தவறு. எதனையும் மக்கள் தீர்மானிப்பார்கள். சரியென்றால் ஏற்றுக்கொள்வார்கள். இல்லையென்றால் விலக்கிவைப்பார்கள். இதனைப் புரிந்துகொண்டு செயற்படவேண்டும் - என்றார். (அ-ஒ-20)


## இரண்டு...

உயிரிழந்தவர்களாவர்.

அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டு ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளன.

அணைக்கட்டு ஊடாக சைக்கிளில் பயணித்தபோது, சிறுமிகள் குளத்துக்குள் வீழ்ந்திருக்கலாம் என்றே முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் கருதப்படுவதாகவும், மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(அ-ம-125)




## உடுப்பிட்டியில்...

குடும்பத்தலைவர் ஒருவர் படுகாயமடைந்து கவலைக்கிடமான நிலையில் சிகிச்சைபெற்றுவருகின்றார்.

நேற்று அதிகாலை இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கோழிகளை மொத்தமாக வாங்கி விற்பனை செய்து வந்த குறித்த குடும்பத் தலைவரின் வீட்டுக்கு வழமைபோல, நேற்று அதிகாலை 3 மணியளவில் வாகனமொன்றில் கோழிகள் கொண்டுவரப்பட்டுள்ளன. அவற்றை இறக்கிய பின்னர் வாகனம் சென்றுவிட்டதால், வீட்டுக்கதவை பூட்டிவிட்டு குடும்பத்தலைவர் வீட்டினுள் சென்றுள்ளார். அப்போது வெளியே ஏதோ அசாதாரணமான சத்தம் கேட்டதையடுத்து, அந்தக் குடும்பத்தலைவர் வீட்டுக்கு வெளியே வந்து பார்த்தபோதே அவர்மீது சரமாரியான வாள்வெட்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. அவர் கூக்குரல் எழுப்பிய சத்தம்கேட்டு குடும்பத்தலைவரின் மனைவி வெளியில் வந்து பார்த்தபோது, அவரிடமிருந்த தங்கச் சங்கிலியைத் தருமாறும் இல்லையேல் அசிட் வீச்சுத் தாக்குதலை நடத்துவோம் என்று மிரட்டி மூன்றரைப் பவுண் சங்கிலி கொள்ளையிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, அந்தக் கொள்ளையர்கள் மோட்டார்சைக்கிளில் தப்பிச் சென்றதாகவும் பொலிஸாரிடம் முறையிடப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

(அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துப்பாக்கியைத் திருடிய பொலிஸ் அலுவலர் கைது

முல்லைத்தீவு மாவட்டத்தின் வெலிஓயா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் அதிகாரியொருவர், பொலிஸ் நிலையத்திலிருந்து கைத்துப்பாக்கியைத் திருடிய குற்றத்துக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதுடைய பொலிஸ் அலுவலரே கைது செய்யப்பட்டதுடன், அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-19)


## 1ஆம் ஆண்டு நினைவுதின அழைப்பு



கடந்த 16.05.2023 செவ்வாய்க்கிழமை
அன்று சிவபதமடைந்த
எமது அன்புத் தெய்வம்

அமரர்
**கலாநிதி கார்த்திகேசு திருப்பதி**
அவர்களின்

முதலாம் ஆண்டு நினைவு தின ஆத்மசாந்தி கிரியைகள் நாளை (03.06.2024) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கட்டுப்பலானை,
கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

குடும்பத்தினர்.
077 4839 305


# கவுணாவத்தையில் நேற்று வேள்வி

கீரிமலை கருகம்பனை அந்திரானை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய வருடாந்த மரபுவழி வேள்விப் பொங்கல் உற்சவம், நேற்றுச் சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

வேள்விப் பொங்கல் உற்சவத்தை முன்னிட்டு, நேர்த்திக்கடன் வைத்து வேள்வி ஆடுகளை வளர்த்தவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு, அவற்றைப் பொதுமக்களுக்குக் காட்சிப்படுத்தினர். நேற்று அதிகாலை 2 மணியளவில் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து பொங்கல் இடம்பெற்றன.

அதிகாலை 3.30 மணி முதல் நூற்றுக்கணக்கான ஆட்டுக்கடாக்கள், சேவல்கள் என்பன வெட்டப்பட்டு, நேர்த்திகள் நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ப-66)


## விற்பனைக்கு

கொழும்பு கல்கிசை வீதியில் கடற்கரை பக்கமாக 20 அடி தூரத்தில் 10.5 பேர்ச் வெறும் காணி விற்பனைக்கு உண்டு.
விலை :- 40 மில்லியன்
077 794 2152
(CS/27239) J-1

## கனரக வாகன சாரதி தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல அரிசி ஆலைக்கு
**கனரக வாகன சாரதி தேவை.**
உங்கள் சுயவிபரக்கோவையினை
**"சிறி குமரன் இரும்பகம்"**
இல 83 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.
(CS/55242) J-1

## மணமகள் தேவை

பிரித்தானியாவில் பிறந்து நிரந்தர வதிவிட உரிமை கொண்ட 29 வயதான உயர்குடி இந்து (V) குலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு பட்டப் படிப்பை நிறைவு செய்த ஆங்கிலத்தில் நன்கு புலமை கொண்ட மணமகள் தேவை.

**புனர்பூசம், 3ம் பாதம்.**

**குறிப்பு** : தரகர்கள் தொடர்பு கொள்ளவேண்டாம்.
**தகவல்** : த.பாலகுமார் (தந்தை)

(புன்னாலைக்கட்டுவனை பூர்வீகமாக கொண்ட இவர் யாழ்ப்பாணம், திருகோணமலை. uk இல் தொழில் ஸ்தாபனங்களை நடாத்தி வருகிறார்.)
(CS 636) S-1

தொடர்புகளுக்கு
வட்ஸ்சப் : +44 742 312 3456

## மரண அறிவித்தல்

பிறப்பு 09 . 08 . 1956



இறப்பு 01 . 06 . 2024

**நடராஜாக்குருக்கள் விசாகரட்ணம் ஐயர்**

நல்லூர் வீரமாகாளி அம்மன் கோவிலடியை பிறப்பிடமாகவும் நெதர்லாந்தை (Holland) வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜாக்குருக்கள் விசாகரட்ணம் ஐயர் அவர்கள் நேற்று (01.06.2024) சனிக்கிழமை அம்பாளின் திருவடியைச் சென்றடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜாக்குருக்கள் - வாலாம்பிகை அம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியக் குருக்கள் - பராசக்தி அம்மா தம்பதியரின் மருமகனும், ஞானசக்தியின் அன்புக் கணவரும், மயூரா, நிஷாந் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியக் குருக்கள், முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் மற்றும் சண்முகரட்ணம் ஐயர், றோசாமலர் ஆகியோரின் அன்பு மாறா சகோதரனும், சிவபாக்கியம், ஜெயம், சிவஸ்ரீ இராஜேந்திரக்குருக்கள், தையல்நாயகி, உலககுருநாதக் குருக்கள், முத்துச்சாமிகுருநாதக் குருக்கள், நவலக்ஷ்மி ஆகியோரின் மைத்துனரும், அமரர் அமுதா, ஸ்ரீபிரகாஷ் (கனடா), அருள்பிரகாஷ் (கனடா), கல்யாணசுந்தர் (கனடா), சிவஸ்ரீ கமல்ராஜ் குருக்கள் (வீரமாகாளி அம்மன் கோயில்), நரேந்திரன் (அவுஸ்திரேலியா), இந்திரவதனி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறிய தந்தையும், சிந்துஜா, அமரர் கிருஷ்ணவேணி மற்றும் சிவஸ்ரீ கிருஷாந் குருக்கள், பிரஷாந் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (07.06.2024) வெள்ளிக்கிழமை நெதர்லாந்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

140, பருத்தித்துறை வீதி,
(வீரமாகாளி அம்மன் கோவில்)
யாழ்ப்பாணம்.

தகவல்: குடும்பத்தினர்.
077 8060 296
(CS 644) A-1

## ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 19 . 07 . 1933



ஆண்டவன் அடியில் 30 . 04 . 2024

**அமரர் திரு. கனகசபை யதுகுலசிங்**

**(ஓய்வுபெற்ற உடற்கல்வி விரிவுரையாளர்-மணிமாஸ்டர்/மணி அண்ணன்)**

அன்னார் இறைபதமடைந்த செய்தி கேட்டு நேரடியாக வருகை தந்து இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட உறவினர்கள், நண்பர்கள் நல்லூர் கொழும்புத்துறை கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலைகளின் பழைய மாணவர்கள் மற்றும் எம் சக உத்தியோகத்தர்கள், விளையாட்டுத்துறை சார்ந்த அன்பர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விரிவுரையாளர்கள், தொலைபேசி மூலம், சமூக வலைத்தளங்கள் மூலம், தொடர்பு கொண்டு துக்கம் உசாவிய அன்பர்கள் உறவினர்கள், நலன் விரும்பிகள்-அனைவருக்கும் மற்றும் 31.05.2024 அன்று கீரிமலையில் நடைபெற்ற கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய உணவும் எமது இல்லத்தில் இடம்பெற இருப்பதால் இதனையே தனிப்பட்ட அழைப்பாகக் கொண்டு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

186, பலாலி வீதி,
கந்தர்மடம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'குப்பிழான் ஐ.சண்முகனின் சிறுகதைகள்'

# நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுன் 2 மறைந்த முதுபெரும் எழுத்தாளர் குப்பிழான் ஐ.சண்முகனின் சிறுகதைகள் முழுமையாக உள்ளடக்கப்பட்ட 'குப்பிழான் ஐ.சண்முகனின் சிறுகதைகள்' நூலின் வெளியீட்டு விழா, கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் தலைமையில் இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வெளியீட்டுரையை கொழும்புப் பல்கலைக்கழக கல்வியியற் றுறை விரிவுரையாளர் அ.பௌநந்தியும், கருத்துரைகளை யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இராஜேஷ்கண்ணா, ஆசிரியரும், ஆய்வாளருமான சி.ரமேஷ் ஆகியோரும், அறிமுகவுரையை மருத்துவரும் எழுத்தாளருமான எம்.கே.முருகானந்தனும், ஏற்புரையை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த.அஜந்தகுமாரும் நிகழ்த்தவுள்ளனர். (ப-66)


## விற்பனைக்கு

சோமசுந்தரம் அவனியூவில் 1 3/4 பரப்பு காணியில் 4 அறைகள் கொண்ட, வாகனத் தரிப்பிட வசதியுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்பு: 076 116 3919

## காணி விற்பனைக்கு

வடமராட்சி, கம்பர்மலை, வல்வெட்டியில் பாதையுடன் கூடிய 6 1/2 பரப்பு விஸ்தீரணமும் மற்றும் அதனையடுத்த (Adjoining Land) சுமார் 2 பரப்புமுடைய மொத்தம் இரண்டு வெற்றுக்காணிகள் விற்பனைக்குண்டு. (Nc/55233- N-1)

தொடர்பு : G.A. சூசைதாசன்

075 699 3719 / 077 902 7879

## வேலையாள் தேவை

Sujith Enterprises

வேலை வெற்றிடங்கள்:

- Assistant Manager
- Recovery Officer

முகவரி: சாவகச்சேரி, யாழ்ப்பாணம். (CS/28411) J-1

076 967 4346, 076 712 7068

## காணியுடன் வீடு விற்பனைக்கு

பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியிலிருந்து 100 meter தூரத்தில் 4500 சதுரஅடி கொங்கிறிட் தூண் பீம்களுடன் கட்டப்பட்டு 9 படுக்கையறை, 2 வரவேற்பறை, 2 பெரிய Hall, 2 பெரிய சமையலறை கொண்ட 2 பரப்பு 11.5 குழி காணியுடன் **மாடி வீடு விற்பனைக்கு உண்டு.** வாங்க விரும்புபவர்கள் மட்டும் நேரடியாக தொடர்பு கொள்ளவும். (CS/55240) J-1

தொடர்பு:- 076 768 6404

whats app:- 0044 795 803 1964




## வேலைக்கு ஆட்கள் தேவை

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள **யோகு ரேடிங் Co இற்கு ஆட்கள் தேவை.** மேலதிக விபரங்களுக்கு நேரில் சமுகமளிக்கவும். (மக்கள் வங்கி அருகாமையில்) இல. 310A ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (CS/625) J-1

## வீட்டு வேலைக்கு ஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள 4 பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டு வேலைக்கு 45 வயதிற்கு உட்பட்ட **பெண் வேலையாள் தேவை. சம்பளம் - 45000** வேலை நேரம் - 8.00 - 5.00 pm அருகில் இருப்போர் விரும்பத்தக்கது. (CS/55239) J-1

தொடர்பு:- 077 789 8862

## காணி விற்பனைக்கு

பொன்னாலை வீதி விதானை வளவு மானிப்பாயில் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் 500M தொலைவில் **2பரப்புக் காணியும், வீடும் விற்பனைக்கு உண்டு.** தரகர் தேவையில்லை. (CS/622) J-1

தொடர்புகளுக்கு: 077 500 8180

## வேலை ஆட்கள் தேவை

தெல்லிப்பளை எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு வர்த்தகப் பிரிவில் கல்வி பயின்ற பெண் பிள்ளைகள் கணக்கு பதிவுகளை மேற்கொள்வதற்கு தேவை எரிபொருள் நிரப்பு வேலையாட்களும் தேவை.

தொடர்புகளுக்கு: 0766655643, 0773405643

## விற்பனைக்கு

நல்லூர் நாவலர் வீதியில் (கோயில் வீதிக்கு அருகில்) 5.7 பரப்பு காணியுடன் **வீடு விற்பனைக்கு உண்டு.** மற்றும் Colombo

வெள்ளவத்தையில் :- 840,1200,1275,1350 SqftApartments,

தெகிவளையில் :- 900,1050,1240 Sqft 3BR Apartments.

கல்கிசையில் :- 3p,4p,6p,32p தனி வீடுகள்

**குறைந்த விலையில் விற்பனைக்கு உண்டு.** (CR/42548) J-1

தொடர்பு:- 077 968 1340

## காணி விற்பனைக்கு

ஊரெழு அம்மன் கோவிலில் முன்பக்க பிரதான வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 பரப்புக்காணி சுற்று மதில், கிணறு, தென்னை மரங்கள் என்பவற்றைக் கொண்ட காணி விற்பனைக்கு உண்டு. (CS/55243) J-1

077 002 2251, 077 759 0799, 077 720 7097

## இணைப்ப இணையத்தளம் வழங்கும் அடுத்த தலைமுறை திருமண சேவை

தமிழ் உலகிலேயே முதன் முறையாக நவீன தொழில் நுட்பங்கள் கொண்டு அறிமுகமாகின்றது இணைப்ப நவீன திருமண சேவை.

ஏராளமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வரன்களை உங்கள் தெரிவிற்கேற்ப அணுகி, தொடர்புகொண்டு உங்கள் துணையை தெரிவுசெய்ய முடியும்.

பதிவுக்கட்டணம் இல்லை.

இப்பொழுதே இணையுங்கள் இணைப்பவுடன்.

Ts&Cs apply.

www.inaipa.com.

## வீடு / அறை வாடகைக்கு தேவை

திருநெல்வேலி Nothern Hospital க்கு அண்மையில் சிறிய வீடு / அறை குறுகிய காலத்திற்கு வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு: 072 576 5097, 077 355 6091

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நுணாவில் சாவகச்சேரியில் 14 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
- குடியிருப்பு சூழ உள்ள பகுதி.
- A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை.
- பலன் தரும் மரங்கள் உண்டு.
- தரகர் தேவையில்லை. (CS/628) J-1

தொடர்புகளுக்கு: 070 497 4565, 070 420 7343

## பணியாளர்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றிற்கு கீழ் வரும் பணியாளர்கள் உடன் தேவை முன் அனுபவம் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1) சமையலாளர் :- யாழ்ப்பாணத்து பாரம்பரிய சைவ உணவு வகைகள் செய்யத்தெரிந்திருத்தல் வேண்டும். (தகுந்த சம்பளம் வழங்கப்படும் வயது எல்லை-(20-55)
2) சமையல் உதவியாளர். (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. வயது எல்லை-(20-50)
3) ரூம் (Room) துப்புரவுப் பணியாளர் (முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது) (CS 42554) V-1

நேரில் சமூகம்தரவேண்டிய முகவரி

195, கோயில்வீதி, நல்லூர், யாழ்பாணம். (195,Temple Road, Nallur, Jaffna)

தொடர்புகளுக்கு: 077 251 4986, 077 872 9806


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை சுவாமியார் வீதியில்
அந்தோனியார் கோவிலில் இருந்து 350m தூரத்தில்
**3 பரப்புக் காணியுடனான வீடு விற்பனைக்கு உண்டு.**
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
(தரகர் தொடர்பு கொள்ளவேண்டாம்)
தொடர்பு:- 077 614 6434
(CS/55219) J-1

## SPOKEN ENGLISH & GRAMMAR

யாழ் இந்துக்கல்லூரி வீதியில்
**பேச்சுப் பயிற்சி வகுப்புகள்.**
ஒவ்வொரு மாணவருக்கும் அவரது அடிப்படையில் இருந்து தெளிவாக கற்பிக்கப்படும்.
**தனி, குழு வகுப்பு**
ஆண்டு 7 to GCE OL , AL,
பட்டதாரிகள் - தொழில்புரிவோர்.
K.Ganesh B.A 077 766 8725
(cr. 42528) (N-1)

# முடிவுக்கு வந்தது மோடியின் தியானம்

கன்னியாகுமரி விவேகானந்தர் பாறையில் கடந்த 3 நாள்களாக மேற்கொண்டு வந்த தியானத்தை பிரதமர் மோடி நிறைவு செய்துள்ளார். இதையடுத்து அவர் நேற்று மாலைபுதுடில்லிக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். (ம)

## நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் கட்டடங்களில் மழைக்கலாங்களில் ஏற்படும் நீர்க்கசிவை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.
**Finex**ஸ்தாபனத்தாரின் ஏகவிநியோகஸ்தர்களிடம் இருந்தும் உலகத்தரமிக்க **இராசாயனப் பொருட்களை** விலைக்கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.
**போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்**
வடமாகாணத்தில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியவர்கள்
15 வருட அனுபவமுள்ளவர்கள்
North and East Engineering
55 Stanly Road, Jaffna, Srilanka.
FINEX
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northandeastengineering.com

## வீடு விற்பனைக்கு

கொழும்புத்துறை வீதி பாண்டியந்தாழ்வில்
3 1/2 பரப்புக் காணியில் சகல வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
077 614 6434
(CS/55220) J-1

## சொகுசு வீடு விற்பனைக்கு

சில்லாலை பிரதான வீதியில் தளபாடங்களுடன்
**சொகுசு வீடு (3 1/2 பரப்பு) விற்பனைக்கு உண்டு.**
Contacts Number: 074 002 2219
Mithiran Thirukeswaran
(CS/5523) J-1

## வேலையாள்கள் தேவை

உணவகமொன்றுக்கு சமையல் மற்றும் ரொட்டி வேலைக்கு ஆள்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 317 1908

## காணி விற்பனைக்கு

யாழ். கல்வியங்காட்டில் G.P.S விளையாட்டரங்கிற்கு முன்னால்
**11 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**
Call/ Whatsapp
தொடர்புகளுக்கு: 077 415 4375


## மணமகள் தேவை

யாழ். இந்து (V) 1987 இல் பிறந்த மேசராசி அசுவினி நட்சத்திரம் சூரியன் செவ்வாய் பாவகிரகம் 11 1/4
அரச நிலஅளவையாளர்
**மணமகனுக்கு மணமகள் தேவை.**
077 642 5049
(CS/55230) J-1

## இணைந்த கணிதம் - A/L

35 வருடங்களுக்கு மேல் கற்பித்தல் அனுபவமுள்ள ஆசிரியரால் தனியாகவோ, குழுவாகவோ கற்பிக்கப்படும்.
தொடர்பு:- 076 057 3384
(CS/55217) J-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவில்லும்



கடந்த 05.05.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் பரமசிவம் சிவபாலன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (02.06.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை மறுதினம் (04.06.2024) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்திலும் நடைபெற்று அதனைத் தொடர்ந்து முற்பகல் 11.00 மணியளவில் **“இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி” மண்டபத்தில் (இல.63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்)** நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், இன்று வரை எமக்கு பல வழிகளில் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**இல.160 (184)**
**நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**
077 937 1846 / 077 625 8265

**மனைவி (ரதி)** மற்றும் **குடும்பத்தினர்.**
(cs.55198 (N-1)

## Techna Technical Institute

A/L தொழினுட்பப்பிரிவு

A/L 2023 (2024) உயர்தரப் பரீட்சையில் தொழினுட்பப்பிரிவில் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்ற எமது மாணவர்களை

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா.நிலை | பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|---|---|
| ந.கிஷாந்தி | A 2B | 06 | த.வனிதா | A 2C | 31 |
| சி.ஹார்னி | 2A C | 07 | ற.அபிஷா | B 2C | 32 |
| க.ஜக்சிகா | 2A C | 08 | ப.பேபிகா | B C S | 36 |
| ந.றஜோலினி | A 2B | 12 | சி.சௌமியா | B 2C | 37 |
| த.கிருபாஜினி | A B C | 14 | க.டனுசா | 3C | 38 |
| நா.அபிசா | 2B C | 15 | வ.கபிஷாளினி | B 2C | 39 |
| ச.நிதுசா | A 2B | 17 | ஹெ.நிஷர்மி | 3C | 41 |
| பி. அபிராம் | B 2C | 22 | ரா. பாதுஷா | 3C | 43 |
| கே.நிதுஷா | A 2C | 29 | சி.கபிநயா | 3C | 47 |
| சி.சிந்துஜன் | B 2C | 30 | ஜெ.நிதர்ஷனா | 3C | 50 |

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா.நிலை | பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|---|---|
| ச.அஜிலக்சன் | 2C S | 05 | சி.பழுராம் | A 2C | 30 |
| வி.சதுர்சன் | A B C | 07 | வி.அஜய் | 3C | 36 |
| கொ.டெல்சிகன் | 2C S | 08 | ர. பிரசாந்த் | B 2C | 37 |
| கு.திசானுஜன் | A 2B | 10 | பி.திவிஸ்ரன் | B 2C | 39 |
| யோ.விஜனன் | 3B | 11 | அ.சாமுவேல் | 3C | 40 |
| யோ.திருசன் | A B C | 15 | வி.கம்சி | 3C | 49 |
| அ.ஜிவிந்த் | 3S | 18 | ம. சிலக்சன் | B 2C | 50 |
| ற.றிலக்சன் | 3C | 20 | அ.டினுசன் | 2C S | 54 |
| அ.லக்சன் | B 2C | 27 | மு.மாதங்கி | 3C | 58 |

**A/L 2023 REPEAT BATCH** 02.06.2024
**ஆரம்பம்** ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549

# தென்னிந்திய தலயாத்திரை

**30 ஆலயங்கள் தரிசனம் செய்ய முடியும்** — 12 நாட்கள்

### கட்டணத்தில் உள்ளடங்குபவை

- விமானபயணச்சீட்டு
- குளிரூட்டப்பட்ட வாகனம்
- மூன்று வேளை உயர்தர சைவ உணவு
- தேநீர் / பழச்சாறு
- குளிரூட்டப்பட்ட தங்குமிடம்
- நுழைவுக்கட்டணம் (சிறப்புத்தரிசனம்)
- சுற்றுலா மேலாளர் நினைவுப் பரிசில்

தொடர்புகளுக்கு: 077 711 4828
**BOHAR TRAVELS**
Bohar International (Pvt) Ltd
510, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(cs 28560) (N-1)

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில்
**A-9 வீதி முகப்புடன் 51 பரப்பு காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடி பாதை (18)
- கைதடிச் சந்தி 100M தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

குரு: 077-029 4164 / 077-329 4130 / 077-294 1521
(CS/827) J-1

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111   செய்தி : news@uthayan.com   விளம்பரம் : advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.06. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்: 08

# சஞ்சீவி

Registered as a Newspaper

உண்மையைச் சொல்லி
நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும்...
நிலை உயரும் போது பணிவு
கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்

-கண்ணதாசன்

மலை : 33 | வள்ளுவர் ஆண்டு : 2055 | ஞாயிற்றுக்கிழமை (02.06.2024) | சிகரம் : 204



# நடுத்தர வயதினரின் அரசியல்?

நிலாந்தன்

அண்மையில் மருத்துவ நிபுணரான ஒரு நண்பர் கேட்டார் "என்னுடைய பிள்ளை, தான் ஏன் வெளிநாடு போகக்கூடாது என்று கேட்டால், அந்தப் பிள்ளைக்கு நீ ஏன் நாட்டிலேயே இருக்கவேண்டும் என்று நான் கூறுவதற்கு பொருத்தமான காரணம் ஏதும் உண்டா?" என்று. இந்தக் கேள்வி யாழ்ப்பாணத்தின் படித்த நடுத்தர வர்க்கப் பெற்றோர் பலர் மத்தியில் உண்டு. இந்தக் கேள்விக்குப் பொருத்தமான விடை எத்தனை தமிழ் அரசியல்வாதிகளிடம் உண்டு?

பொருளாதார நெருக்கடியின் விளைவாக ஒரு புலப்பெயர்ச்சி அலை ஓடிக்கொண்டிருக்கிறது. சிங்கள மக்கள் மத்தியிலும் தமிழ்மக்கள் மத்தியிலும் ஆயிரக் கணக்கானவர்கள் புலம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அண்மையில் மே 18ஐ முன்னிட்டு ஒரு கார்ட்டூனிஸ்ட் அற்புதமான ஒரு கருத்தோவியத்தை வரைந்திருந்தார். அதில் 2009 மே 18ஆம் திகதியன்று மஹிந்த கட்டுநாயக்காவில் வந்திறங்கும் காட்சி ஒரு பெட்டிக்குள் வரையப்பட்டிருக்கிறது. மஹிந்த விமான நிலையத்தில் இறங்கியதும் குனிந்து தரையைத் தொட்டு வணங்குகிறார். ஆனால் இப்பொழுது 15ஆண்டுகளின் பின், சிங்கள மக்கள் மத்தியில் இருந்தது. புலம்பெயர்வோர் உலகின் வெவ்வேறு நாடுகளின் தலைநகரங்களில் உள்ள விமான நிலையங்களில் தரையிறங்கி அந்தந்த விமான நிலையங்களில் நிலத்தைத் தொட்டு முத்தமிடும் காட்சி மற்றொரு பெட்டிக்குள் வரையப்பட்டுள்ளது. அதுதான் உண்மை. யுத்தத்தில் வென்றெடுத்த நாட்டைவிட்டு அதன் மக்களே வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். போர்க்காலத்தில் வெளியேறியது வேறு; பொருளாதார நெருக்கடி காரணமாக வெளியேறுவது வேறு. பொருளாதார நெருக்கடிக்குள், தாய் நாட்டிலேயே நின்று, கடுமையாக உழைத்து தன்னையும் தனது தேசத்தையும் நிமிர்த்த வேண்டும் என்று ஓர் இளைய தலைமுறை ஏன் சிந்திக்கவில்லை?

குறிப்பாக, தமிழ் மக்கள் மத்தியில் இம்முறை வெளியேறிக்கொண்டிருப்பது இளையோர் மட்டுமல்ல. அதிக தொகையில் படித்தவர்கள், பட்டதாரிகள், முகாமையாளர்கள், தொழில்முனைவோர், மருத்துவர்கள், தாதியர்கள், பொறியியலாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள்... என்று பல்வேறு வகைப்பட்ட துறைசார்ந்த நிபுணத்துவமுடையவர்கள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரை கிடைத்த உத்தியோகப்பற்றற்ற புள்ளி விவரங்களின்படி, கனடாவுக்கும் லண்டனுக்கும் புலம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை பல்லாயிரம் என்று கணக்கிடப்படுகிறது. இது தவிர வழமையாக குடும்பங்களின் மீளிணைவு என்ற அடிப்படையில் மணமக்கள் போய்க்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு வெளியேறும் பெரும்பாலானவர்கள் தேர்தலில் வாக்களிக்கும் வயதுக்கு வந்தவர்கள். அதாவது ஒரு நாடாளுமன்ற உறுப்பினரைத் தெரிவுசெய்யத் தேவையான வாக்காளர்கள் ஏற்கனவே வெளியேறிவிட்டார்கள் என்று கூறலாமா?

"இந்த மண் எங்களின் சொந்த மண்" என்று பாடி, தமிழ்த் தேசிய அரசியலை முன்னெடுத்த ஒரு மக்கள் கூட்டத்தின் மத்தியில் இருந்து அந்த மண்ணை விட்டுப் போனால் போதும் என்று கருதும் ஒரு மனோநிலை, ஏன் மேலெழுகின்றது?

ஏனென்றால், தமிழ்மக்கள் மத்தியில் நம்பிக்கையூட்டும் தலைமைகள் இல்லை. நம்பிக்கையூட்டும் முன்னுதாரணங்கள் குறைந்துவிட்டன. ஒருவர் மற்றவரை நம்பாத; ஒருவர் மற்றவரை சந்தேகிக்கின்ற; தான் ஒன்றும் செய்யாமல் இருந்து கொண்டு மற்றவரைக் குறைகூறுகின்ற; முன்னுக்குப் போகும் ஒருவரை யாரோ பின்னுக்கிருந்து இயக்குகிறார்கள் என்று சந்தேகிக்கின்ற; அவநம்பிக்கை மிகுந்த ஒரு மக்கள் கூட்டமாக தமிழ்மக்கள் மாறி வருகிறார்களா? இந்த மண்ணிலேயே நின்றுபிடிப்போம், தமிழ்த் தேசத்தைக் கட்டியெழுப்புவோம் என்று நம்பிக்கையூட்டக்கூடிய தலைவர்கள் எத்தனை பேர் உண்டு?

ஒரு காலம் அரசியல் என்பது தியாகங்கள் செய்வது; அர்ப்பணிப்புகள் செய்வது; உயிரைக் கொடுத்துப் போராடுவது என்று இருந்த ஒரு சமூகத்தில், இப்பொழுது அரசியல் என்பது பெட்டி கைமாறுவது; யாரோடாவது "டீலுக்குப்" போவது; மதுச் சாலைகளுக்கான அனுமதிகளுக்கு விலைபோவது... என்று மாறிவிட்டதா? தமிழ்மக்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களோ, அவர்களையே சந்தேகிக்கிறார்கள். அவர்களையே திட்டுகிறார்கள்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் விக்னேஸ்வரனைச் சந்தித்தபோது, ஜனாதிபதி ரணில் கூறிய ஒரு விடயத்தை இங்கு சுட்டிக்காட்டவேண்டும் "தமிழ்மக்கள் மத்தியில் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள் தான் அரசியல் பேசுகிறார்கள். இளவயதினர் பொருளாதார விவகாரங்களில் தான் நாட்டமாக இருக்கிறார்கள்" என்று அவர் கூறியிருக்கிறார். அது சரியா பிழையா என்பது தனியாகப் பார்க்கப்படவேண்டும். ஆனால், தமிழ் அரசியல் சமூகத்தைக் குறித்த அவருடைய பார்வை அது.

ஒரு காலம் தமிழ் இளையோர் தமது உயிர்களைத் துச்சமாக மதித்து அரசியலை முன்னெடுத்தார்கள். முழு உலகத்துக்கும் அபூர்வமான அனுபவமாக அந்தப் போராட்டம் அமைந்திருந்தது. அவ்வாறு மகத்தான தியாகங்களைச் செய்த ஒரு மக்கள் கூட்டம், மகத்தான பெருஞ்செயல்களைச் செய்த ஒரு மக்கள் கூட்டம், சித்தர்களையும், சான்றோர்களையும், மேதைகளையும், நிபுணர்களையும், மகத்தான படைப்பாளிகளையும் உற்பத்தி செய்த ஒரு சமூகம், இன்று அவிழ்த்து விட்ட பாக்கு மூடை போல சிதறிக்கொண்டு போகின்றதா?

வடக்காக கிழக்காக; சாதியாக சமயமாக; கட்சிகளாக, குழுக்களாக; ஊர்ச் சங்கங்களுக்குள் எதிர் குழுக்களாக; ஆலய பரிபாலன சபைகளுக்குள் எதிரெதிர் குழுக்களாக; கட்சிகளுக்குள் அணிகளாகப் பிரிந்து நிற்கிறார்கள். புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில், இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் அரசியலிலும் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் அரசியலிலும் தமிழ் மக்கள் இரண்டாகி நிற்கிறார்கள். தமிழ்மக்கள் அதிகளவு தாங்களே தங்களுக்குள் மோதிக் கொண்டிருக்கிறார்கள். மூத்த பெரிய கட்சி நீதிமன்றத்தில் நிற்கிறது. கோவில்களின் ஆலயப் பரிபாலனசபைகளும் நீதிமன்றத்தில் நிற்கின்றன.

இவ்வாறு சிதறுண்டு சிறுமைப்பட்டுப் போயிருக்கும் ஒரு மக்கள் கூட்டத்தைப் பார்த்து உங்களுடைய இளைய தலைமுறைக்கு அரசியலில் நாட்டம் குறைந்துவிட்டது என்ற பொருள்பட ரணில் கூற வருகிறாரா?

அவர் கூறிய மற்றொரு விடயம், தமிழ்ப் பொது வேட்பாளருக்காக தமிழ்க் கட்சிகள் ஒன்றிணையப் போவதில்லை என்பது. தமிழ்ப் பொதுவேட்பாளரின் விடயத்தில் குடிமக்கள் சமூகங்களுக்கு இடையே காணப்படும் அளவுக்கு ஐக்கியம் கட்சிகளுக்கு இடையே இல்லை என்பது உண்மைதான். தங்களுக்கு இடையே ஐக்கியப்பட முடியாத கட்சிகள் எப்படி மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியும்?

கடந்த 15 ஆண்டுகால கட்சி அரசியலானது ஐக்கியத்தை கட்டியெழுப்பத் தவறிவிட்டது. குடிமக்கள் சமூகங்களின் தலையீட்டால்தான் ஓரளவுக்கு குறுகிய கால விவகார மைய ஐக்கியங்கள் சாத்தியமாகின. இப்பொழுதும் குடிமக்கள் சமூகங்கள்தான் கட்சிகளோடு இணைந்து ஒரு பொதுத் தமிழ் நிலைப்பாட்டை உருவாக்கி, அந்த அடிப்படையில் ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்கி, அதற்கூடாக பொதுவேட்பாளரை முன்னிறுத்த முயற்சிக்கின்றன. தமிழ்ப் பொதுவேட்பாளர் எனப்படுகின்றவர், கட்சி கடந்த ஒருவர். சாதி சமயம் கடந்த ஒருவர். பிரதேச வேறுபாடுகளைக் கடந்த ஒருவர். தமிழ்மக்கள் மத்தியில் காணப்படும் எல்லா வேறுபாடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கடந்து அவர் தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்பார் என்று குடிமக்கள் சமூகங்கள் கூறுகின்றன.

தமிழ்ப்பொது வேட்பாளருக்காகத் திரட்டப்படும் வாக்குகள் ஒரு தேசத்துக் கானவை.

08

**'தமிழ்மக்கள் மத்தியில் 40 வயதுக்கு மேற்பட்டவர்கள்தான் அரசியல் பேசுகிறார்கள். இளவயதினர் பொருளாதார விவகாரங்களில் தான் நாட்டமாக இருக்கிறார்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கே.வி.தவராசா

# பற்றியெரிந்த துறைமுகமும்

## முற்றுப்பெறாத வழக்கும்!



**2006** ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 18 ஆம் திகதி காலி. காலை 7 மணி.

காலி தெற்கு, துறைமுகப் பகுதிக்கு அண்மையில் அந்தப் பிரதேசத்தில் உள்ள மீனவர்கள் கடற்றொழிலுக்காக படகுகளுடன் கடலில் இறங்கினர். அந்தத் துறைமுகம் தான் இலங்கையிலேயே இரண்டாவது பெரிய துறைமுகம் என்பதாலும், கடற்படையின் முக்கியமான தளம் என்பதாலும், அந்தப் பகுதியில் மீன்பிடிக்க பல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. துறைமுகத்துக்கு நெருக்கமாகப் படகுகள் வரக்கூடாது, கடற்படையினரின் விசேட அனுமதி அட்டையை வைத்திருக்கும் படகுகள் மாத்திரமே, அதுவும் கடும் சோதனையின் பின்னரே, கடற்றொழிலில் ஈடுபட அனுமதி என்று பல கட்டுப்பாடுகள்.

அன்றும் வழமைபோல, கடற்படையினரின் சோதனை நடவடிக்கைகளை முடித்துவிட்டு, மீனவர்களின் படகுகள் கடலில் மிதக்கத் தொடங்கி, சில நிமிடங்கள் தான் சென்றிருக்கும். அதற்குள், கடலைக் கிழித்தபடி விரைந்து வந்த ஐந்து படகுகள் மீனவர்களின் படகுகளோடு இணைந்து கொண்டன. முதலில் மீனவர்களுக்கு எதுவும் விளங்கவில்லை. ஆனால் அடுத்த சில நிமிடங்களில், அந்த 5 படகுகளும் வழக்கமான மீன்பிடிக்கும் இடத்துக்குச் செல்லாமல் துறைமுகம் இருந்த திசைநோக்கி 'சர்ரென' விரைந்தபோதுதான் அவர்களுக்கு அடுத்து நிகழப்போகும் விபரீதம் புரிந்தது.

அந்த ஐந்து படகுகள் துறைமுகத்தை நெருங்கியதும்

"டுடுடும்ம்ம்ம்!"

என காதைக் கிழிக்கும் வெடியோசையும், அதைத்தொடர்ந்து விண்ணை நோக்கி கரும் புகையும் ஏககாலத்தில் எழுந்தன. அதன் பின்னர் ஆர்.பி.ஜி. குண்டுகளின் வெடிப்பும், துப்பாக்கிகளின் சடசடப்புமாக காலி தெற்கு துறைமுகம் அல்லோலகல்லோலப் படத் தொடங்கியது. தாக்குதல் நடத்திய இருபடகுகள் அங்கிருந்த கடற்கலங்களை நெருங்கி முத்தமிட்டதும்தான் தாமதம். கடலே நடுங்கும் பேரோசையும், பெரும் நெருப்புக்கோளங்களும், துறைமுகத்தைக் கதிகலங்க வைத்தன. தொடர்ந்து, துறைமுகத்தில் நின்ற நீருந்து விசைப்படகுகள் வெடித்து, மூழ்கத் தொடங்கின.

ஏனைய படகுகளில் வந்தவர்கள் அதுவரை கடற்படையினர் கனவில் கூட பார்த்திராத ஆயுதங்களால் தாக்கியபடியே துறைமுகத்தைச் சல்லடையாக்கத் தொடங்கினர். சுமார் ஒரு மணித்தியாலம் வரை துறைமுகம் வேட்டுச்சத்தங்களால் அதிர்ந்த பின்னரே அடங்கியது.

⊗⊗⊗⊗⊗




இந்தத் தாக்குதலை விடுதலைப்புலிகளே மேற்கொண்டதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து சுமார் நூறு கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள துறைமுகத்துக்கு எப்படி புலிகள் படகுகளில் வந்தார்கள் என்று அரசதரப்பு தலையைப் பிய்த்துக்கொண்டது. கடைசியில் புலிகள் காலிதுறைமுகத்தை அண்டிய பகுதிகளில் உள்ள மீனவர்களின் வீடுகளில் பதுங்கி இருந்துவிட்டே, இந்தத் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் அதே அரசாங்கம் தெரிவித்தது. இவ்வாறு துறைமுகம் மீது தாக்குதல் நடத்தியமை, தாக்குதலுக்கான சதியில் ஈடுபட்டமை, கடற்படை முகாமைத் தாக்கி கடற்படையை சேர்ந்த கனக சுரங்கவுக்கு மரணத்தையும், ஏனைய 22 கடற்படையினருக்கு கடும் காயங்களையும் ஏற்படுத்திக் கொலை செய்வதற்கு எத்தனித்தமை போன்ற 23 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு ஐவர் கைதுசெய்யப் பட்டனர்.

கந்தையா இளங்கோ, நிசாந்த எதிரிசிங்க, குணரத்ன கஜவீர, வைரமுத்து சரோஜா, பந்துல கவீர குணரத்ன ஆகியோரே அந்த ஐந்துபேரும். இந்த ஐந்து சந்தேகநபர்களாலும் சுய விருப்பில் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களும், 77 சாட்சிகளும் , 27 தடயப்பொருட்களும் குற்றச்சாட்டுப் பத்திரத்தில் அரச தரப்பு சான்றாகப் பெயரிட்டு காலி மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதில் இளங்கோ, சரோஜா ஆகியோர் தவிர்ந்த ஏனையோர் சிங்களவர்கள். காலித் துறைமுகத் தாக்குதலுக்கும் இந்தச் சிங்கள மக்களுக்கும் என்ன தொடர்பு?? இவர்கள் தான் தாக்குதல் நடத்த வந்த புலிகளுக்கு தங்குமிடம் கொடுத்து மறைத்து வைத்தார்கள் என்றும், கடற்படையினரின் விசேட பாஸை தாக்குதலாளிகளுக்கு வழங்கி அவர்கள் படகில் கடலில் வர உதவி புரிந்தார்கள் என்றும் அரச தரப்பு குற்றம் சாட்டியுள்ளது.

⊗⊗⊗⊗⊗⊗

இந்தத் தாக்குதலை விடுதலைப்புலிகளே மேற்கொண்டதாக அரசாங்கம் அறிவித்தது. எனினும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து சுமார் நூறு கடல் மைல்களுக்கு அப்பால் உள்ள துறைமுகத்துக்கு எப்படி புலிகள் படகுகளில் வந்தார்கள் என்று அரசதரப்பு தலையைப் பிய்த்துக்கொண்டது.

2012 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் முதலாம் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள கந்தையா இளங்கோ, சுயவிருப்பில் பயங்கரவாதத் தடைப்பிரிவு பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கிய குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தின் உண்மை விளம்பல் விசாரணையில் சிரேஷ்ட அரச சட்டத்தரணி அரசதரப்பு சாட்சியாளர்களின் சாட்சியங்களை நெறிப்படுத்தினார்.

இதன்போது அரச தரப்பு சாட்சியங்களைத் தொடர்ந்து, எதிரி தரப்பில் அரச சாட்சியங்கள் குறுக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டன. பின்னர் முதலாம் எதிரியாக பெயர் குறிப்பிடப்பட்ட கந்தையா இளங்கோ சாட்சியமளித்தார். அத்தோடு அரசதரப்பின் சாட்சியங்களுக்கும் முதலாம் எதிரி தரப்பு சாட்சியங்களுக்குமான விசாரணை நிறைவடைந்தது.

'தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த வழக்கின் முதலாம் எதிரியான கந்தையா இளங்கோ, விடுதலைப்புலிகள் இயக்கத்தின் முக்கியமான செயற்பாட்டாளர். அவர் 1995 ஆம் ஆண்டு புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வந்து புலித் தலைமையகத்தின் கட்டளையின் பிரகாரம் விடுதலைப் புலிகளால் இராணுவத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட, பல தாக்குதலில் பங்கு வகித்ததுடன் அரச படைகளுக்கு எதிராக யுத்தக் களத்தில் தாக்குதல்களை நடத்திய போது கண்ணிவெடியில் சிக்கி ஒரு காலையும் இழந்துள்ளார். எதிரியின் உடலில் உள்ள காயங்கள் ஆயுதப் பயிற்சியினாலும் ஆயுதப் போராட்டத்திலும் ஏற்பட்ட காயங்களே .

பொலிஸாரின் எந்தவிதமான சித்திரவதையும், அச்சுறுதலும் இல்லாமல் சுய விருப்பத்திலேயே எதிரி குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு வழங்கியுள்ளார். அரச தரப்பு சான்றாக முன்வைக்கப்படுடுள்ள குற்றஒப்புதல் வாக்குமூலம் சுயமாக எதிரியினால் வழங்கப்பட்ட வாக்குமூலமாகையால் , அந்த வாக்குமூலத்தை எதிரியினால் சுயமாக வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலமென கட்டளையிட்டு அதனை அரச தரப்பு சான்றாக ஏற்கவேண்டும்' என அரச சிரேஷ்ட சட்டத்தரணி தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

அதனைத் தொடந்து எதிரிகள் சார்பில் எனது சமர்ப்பணத்தை முன்வைத்தபோது, சிரேஷ்ட அரச சட்டத்தரணியின் சமர்ப்பணத்துக்கு நான் கடும் ஆட்சேபனையைத் தெரிவித்தேன்.

*(மிகுதி அடுத்த வாரம்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்.பிரகாஷ்

# பலூன்களில் மிதக்கும் போர்முனை

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ ஆக்கிரமிப்பும், ராபா மீதான இஸ்ரேலின் இரக்கமற்ற இராணுவ நடவடிக்கைகளும் உலகின் கவனக்குவிவை ஒட்டுமொத்தமாகப் பெற்றுள்ள அதேகாலப் பகுதியில், தென்கொரியாவை அணுவாயுதம்கொண்டு தாக்குவோம் என்று பகிரங்க எச்சரிக்கையை விடுத்துள்ளது வடகொரியா. 1953களின் ஆரம்பத்தில் கொரியப் போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் வடகொரியாவுக்கும் தென்கொரியாவுக்கும் இடையில் இப்படியான முறுகல்நிலை நிலவுவது சர்வசாதரணமாக மாறிவிட்டது. ஆனால், அதிஆபத்துமிக்கதான அணுவாயுத ஏவுகணைகளை மையப்படுத்தி இரு நாடுகளும் பரஸ்பரம் வார்த்தை மோதல்களில் ஈடுபட்ட 'அரிதான' சந்தர்ப்பமாக இக்காலங்கள் அமைந்திருக்கின்றன.

**நடந்தது என்ன?**

வடகொரியா அணுவாயுதச் சக்திமிக்க நாடாக தன்னை எப்போதோ மாற்றிவிட்டது. அமெரிக்காவின் தடைகளையும் ஐ.நா.வின் எச்சரிக்கைகளையும் மீறி தன்னை அணுவாயுதச் சக்திமிகு தேசமாக அந்த நாடு கட்டமைத்து வைத்துள்ளது. சில நாள்களுக்கு முன்னர் தனது மேம்பட்ட ஐ.சி.பி.எம். ஏவுகணையை வடகொரியா செலுத்தியிருந்தது. குறித்த ஏவுகணை பாய்ந்து செல்லக்கூடிய முழுத் தூரமும் வடகொரியாவால் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டது. இதனால் சீற்றமடைந்த தென்கொரியா, 'எம்மிடமும் ஏவுகணைகள் உள்ளன. அந்த ஏவுகணைகள் வடகொரியாவின் எந்தவொரு நகரத்தையும் தாக்கும் திறன் படைத்தவை' என்று தெரிவித்தது. தென்கொரியாவின் இந்தக் கருத்துக்கு வடகொரியா ஆற்றிய எதிர்வினையே இரு நாடுகளுக்கும் இடையிலான மோதலை விளிம்பு நிலைக்குக் கொண்டுவந்திருக்கின்றன. தென்கொரியாவுக்கு எதிரான கொள்கைகள் வகுக்கப்படுவதற்கு நீண்ட நேரம் ஆகாது என்று அறிவித்திருக்கின்றார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னின் சகோதரி கிம் ஜோங் யான்.

**தலையிட்டார் கிம் ஜோங் யான்**


வடகொரியா அணுவாயுத தேசமாக மாறுவதற்கு அந்த நாட்டின் அதிபர் கிம் ஜோங் உன் எந்தளவு காரணமோ அதுபோல் அவரின் சகோதரியான கிம் ஜோங் யானும் மிகமிக முக்கியமானவர் என்பது உலகறிந்த உண்மை. வடகொரியாவின் கொள்கை வகுப்பாளரே கிம் ஜோங் யான்தான். ஆதலால், கிம் ஜோங் உன்னின் கருத்துக்கு வழங்க வேண்டிய முக்கியத்துவத்தை - கனதியை - கிம் ஜோங் யானுக்கும் வழங்க வேண்டியது தவிர்க்க முடியாததே. இதனால்தான் இந்த விடயம் இப்போது மேலும் பூதாகரமாகக்கூடிய சாத்தியக்கூறுகள் ஏதுநிலைகள் ஏற்பட்டிருக்கின்றன.

ட்ரம்பின் ஆட்சிக்காலத்தில் வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உச்சக்கட்டப் போர்ப்பதற்றம் நிலவியது. அமெரிக்காவை ஒரு பொருட்டாகவே மதிக்காமல் வடகொரியா நடந்துகொண்டது. அப்போதைய வடகொரியாவின் நகர்வுகள் கிம் ஜோங் யானால்தான் தீர்மானிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

கிம் ஜோங் உன்னுக்கு அடுத்தபடியாக வடகொரியாவின் இரண்டாவது சக்திமிக்க தலைவராக அவர் தன்னை வெளிப்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமெரிக்காவுடனான மோதலையும் பின்னர் அந்த நாட்டுடன் இடம்பெற்ற சமரசப் பேச்சையும் 'சிறப்பாகவே' பயன்படுத்தினார்.

ஒருநாட்டின் கொள்கை வகுப்பாளர்கள் எப்போதும் பேராபத்தானவர்கள். அதிலும் வடகொரியா போன்ற இராணுவ சித்தாந்தம் கொண்ட நாடுகளின் கொள்கை வகுப்பாளர்கள் உலகின் தலைவிதியையே எழுதிவிடும் வல்லமை மிக்கவர்கள். ஆக, கிம் ஜோங் யானின் இரண்டாவது இன்னிங்ஸ் தென்கொரியாவை மையப்படுத்தி ஆரம்பிக்கப் போகின்றதா? ரஷ்யா - உக்ரைன் பஞ்சாயத்து முடிவதற்குள் அடுத்த பஞ்சாயத்து ஐ.நா.வின் கதவோரம் வந்துள்ளதா? என்பதுதான் இப்போதைய பரபரப்பு.

இந்தப் பரபரப்பு அடக்குவதற்குள், சுமார் 200க்கும் மேற்பட்ட பலூன்களில் தொன் கணக்கான குப்பைகளை கடந்த வியாழன்று தென்கொரியாவுக்கு அனுப்பியுள்ளது வடகொரியா. இதை, சாதாரண நடவடிக்கை இல்லை என்றும், சர்வதேச ஒப்பந்த மீறல் என்றும் குறிப்பிட்டிருக்கின்றது தென்கொரியா. ஆக, தீகபற்பத்தின் போர்முனை தற்போது எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதுவும் பலூன்கள் மூலம்...!



ம்யூ

# வெல்லப்போவது யார்?

இந்திய நாடாளுமன்றத் தேர்தல் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கின்றது. இந்தியா முழுவதுமான இறுதி மற்றும் 7ஆம் கட்ட வாக்குப் பதிவுகள் 57 தொகுதிகளில் நேற்று நடந்து முடிந்திருக்கின்றன. வாக்குகள் எண்ணப்பட்டு, மக்களின் முடிவு எதிர் வரும் ஜூன் 4ஆம் திகதி வெளியாகும்.

இறுதிக்கட்ட வாக்குப் பதிவுகள் நடைபெற்றபோது, பா.ஜ.கவும், காங்கிரஸ் கட்சியும் மக்கள் கவனத்தைப் பெறுவதில் அதிக ஆர்வத்தை வெளிப்படுத்தின.

வழமையாக தற்போதைய பிரதமர் நரேந்திர மோடி இறுதிக்கட்ட வாக்களிப்புக் காலங்களில் தலைப்புச் செய்திகளில் இடம்பிடித்து மக்களின் கவனத்தைக் கவரும் " விளம்பரப்படுத்தல்" உத்தியை வழக்கமாகக் கொண்டிருந்தார். இம்முறை அந்த யுக்தியை காங்கிரஸ் கட்சியும் பின்பற்றியிருந்தது.

2014ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலின்போது இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நடந்தபோது நரேந்திரமோடி சிவாஜி கோட்டைக்குச் சென்றார். 2019ஆம் ஆண்டு இறுதிக்கட்ட வாக்குப் பதிவு நடந்தபோது கேதார்நாத் குகைக்கு தியானம் செய்யச் சென்றார் மோடி. இம்முறை கன்னியாகுமாரி பாறையில் மோடி தியானம் செய்கின்றார் என்ற செய்தி அனைத்து ஊடகங்களிலும் வெளியாகியிருந்தது. வழக்கம் போன்று அனைவரினது கவனமும் தன்னிடம் இருக்க வேண்டும் என்ற "மோடி யுக்தி" யின் வெளிப்பாடே கன்னியாகுமாரி பாறை தியானம் என்கின்றனர் அரசியல் நோக்கர்கள்.

கடந்த காலங்களில் காங்கிரஸ் கட்சி இவ்வாறான 'கவனக்கலைப்பான்களில்' ஈடுபாடுகாட்டுவதில்லை. ஆனால் இம்முறை மோடிக்குப் போட்டியாக காங்கிரஸும் ஒரு நகர்வை முன்னெடுத்திருக்கின்றது. கடந்த முதலாம் திகதி இந்திய கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடத்தப்பட்டிருக்கின்றது. இந்தியா கூட்டணிக்குள் பிளவுகள் என்கின்ற பா.ஜ.கவின் பரப்புரையை முறியடிக்கும் வகையிலும், அனைவரது கவனத்தை தங்கள் பக்கம் திருப்பும் வகையிலும் காங்கிரஸ் இந்த நகர்வை எடுத்திருக்கின்றது. அது எதிர்பார்த்த பலனை காங்கிரஸுக்குத் தந்திருக்கின்றது என்றும் சொல்லலாம். ஆனால் மோடியின் யுக்தி கடந்த 3 தேர்தல்களிலும் ஒரே மாதிரியாக இருந்தது என்பதால் இப்போது மக்கள் அதைச் சலிப்புடன் நோக்குகின்றனர் என்று கூறுகின்றனர் அரசியல் நோக்கர்கள்.

வாக்களிப்புகள் முடிந்துள்ள நிலையில், காங்கிரஸ் கட்சி தலைமையிலான 'இண்டியா' கூட்டணிக்கு இம்முறை வாய்ப்புகள் உள்ளன என்கின்றன ஒரு சாராரின் கருத்துக் கணிப்புகள். உத்தரபிரதேசம் ஒன்றில் நடைபெற்ற இறுதிக்கட்டத் தேர்தல் பரப்புரையின்போது பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் ராகுல் காந்தி, பா.ஜ.க.விடம் இருந்து நாடு விடுதலை பெறும். நாட்டுக்கு உண்மையான நல்ல நாள்கள் வரப்போகின்றன என்று கூறியிருக்கின்றார். அதேநேரம், பா.ஜ.க. ஆட்சியைத் தக்கவைக்கும் என்ற இன்னொரு சாராரின் கருத்துக்கணிப்புகளும் வெளியாகியவண்ணமே இருக்கின்றன. எதுவாக இருந்தாலும் மக்களின் தீர்ப்பே இறுதித் தீர்ப்பு. அதற்கு இன்னமும் சில நாள்கள் காத்திருக்கத்தான் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவர் தியாகராஜா சுதர்மனின்



## நீரிழிவு முகாமையில் - உணவு, உள்ளம், உடற்பயிற்சி



ஒரு ரசனைக் குறிப்பு

Dr. சியாமா துரைரட்ணம்
*மருத்துவப் பொறுப்பதிகாரி*
*சித்த போதனா வைத்தியசாலை*
*கைதடி.*

இன்றைய காலகட்டத்துக்கு ஏற்ற நூல் ஒன்றினை நூலாசிரியர் தான்கற்ற கற்கைநெறிகளான சித்தமருத்துவம் மற்றும் உணவும் போஷாக்கும் என்பவற்றுடன் தனது அனுபவத்தினையும் கொண்டு நீரிழிவு தொடர்பாக மக்களுக்கு தேவையான செய்திகளை அவர்கள் விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தந்துள்ளார். நூலின் உள்ளடக்கம் தொடர்பில் நூலின் தலைப்பிலேயே குறிப்பிட்டுள்ளமை சிறப்பாகும்.

இந்நூலினை வாசிக்கத்தொடங்கும் போது நம்பிக்கைக்குரிய ஆவணம் என்ற சிந்தனையைத் தந்துவிடுகின்றது. பல்வேறுபட்ட இணையத் தளங்களின் ஆக்கிரமிப்புகளின் மத்தியில் துறைசார்ந்த ஒருவரிடமிருந்து இந்நூல் எமது பாரம்பரிய மருத்துவக் கருத்துகளுடன் வெளிப்பட்டு இருக்கின்றது. அந்த வகையில் இந்நூல் அறிமுகத்தை எழுதுவதில் பெருமையடைகின்றேன்.

பதினைந்து தலையங்கங்களை தாங்கிய இந்நூல் முதலில் நீரிழிவு நோய் தொடர்பான அறிமுகத்தை நவீன விஞ்ஞானத்தின் ஊடாக ஆரம்பிக்கின்றது. இதில் நீரிழிவில் கவனம் செலுத்தவேண்டியவிடயங்கள், ஏற்படும் உபத்திரவங்கள் அவற்றுக்கான பாதுகாப்பு வழிமுறைகள் என்பனவற்றையும் குறிப்பிடுகின்றது. இங்கு சித்த மருத்துவத்தில் கூறப்படும் நரை, திரை, மூப்பு இன்றி வாழ்வதற்கான காயகற்ப முறை தொடர்பில் நூலாசிரியர் குறிப்பிட்டிருப்பது சிறப்பு.

அடுத்துவரும் அத்தியாயங்களில் சித்தமருத்துவத்தில் ஆரோக்கியம் எனப்படுவது எதை? நீரிழிவில் பத்திய ஒழுக்கம் (Diet) ஏன் அவசியம் என்பவற்றைக் குறிப்பிட்டிருப்பது அழகு. தொடர்ந்து நீரிழிவின் வரலாறு அதன் தோற்றம் அதனை கட்டுப்படுத்துவதில் கண்ட முன்னேற்றங்கள், நீரிழிவு உண்டாவதற்கான காரணங்கள், சித்தமருத்துத்தில் நீரிழிவு உருவாகும் விதம் என்பவற்றை அலோபதி மற்றும் சித்த மருத்துவ பழைய நூல்களில் உள்ள பாடல்களை அடிப்படையாகக் கொண்டு தெளிவூட்டியுள்ளார்.

நான்காவது அத்தியாயத்தில் உணவு தொடர்பான மக்களின் மனப்பாங்கு தொடர்பில் திருமூலர் காலத்தில் இருந்து இன்று வரை எவ்வாறு உள்ளது என்பதைக் கோடிட்டுக்காட்டுகின்றார். பருவ கால பாரம்பரிய உணவுகளின் அவசியத்தினையும் உணவு ஆக்குபவரின் மனப்பாங்கு தொடர்பில் கவனம் செலுத்த வேண்டியதை யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பாடலைக்கொண்டு குறிப்பிட்டிருப்பது நமது பாரம்பரியம் எத்தகைய வளர்ச்சியடைந்தது என்பதைக் காட்டுகின்றது.

தொடர்ந்து வரும் அத்தியாயங்களில் நாம் உண்ணும் உணவு வேளைகள், உறக்கம் தொடர்பில் சித்தமருத்துவம் என்ன கூறுகின்றது? என்பதனைத் தெளிவாக குறிப்பிடுவதன் மூலம் இன்றைய நோய்ப்பெருக்கங்களுக்கான காரணங்களில் இவை எவ்வளவு முக்கியமானது என்பதைச் சொல்லிச் செல்கின்றார் நூலாசிரியர். தொடர்ந்து நீரிழிவு தோன்றுவதற்கு நொறுக்குத்தீனிகளின் செல்வாக்கு பற்றி குறிப்பிடப்பட்டுள்ளமை இன்றைய இளந் தலைமுறையினரின் ஆரோக்கியத்துக்கு சிறந்த வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ஏழாவது அத்தியாயத்தினூடு நீரிழிவில் உணவுக் கூறுகளின் பங்கு, உதாரணங்களை குறிப்பிட்டுள்ளதுடன் சிறப்பாக யாழ்ப்பாண தீவுப்பகுதியில் (புங்குடுதீவு) காணப்படும் பாரம்பரிய உணவான களப்பன்னம் பிட்டு தொடர்பில் குறிப்பிட்டுள்ளமை மறைந்துவரும் பாரம்பரிய உணவினை வெளிப்படுத்துவதாக அமைகின்றது.

தொடர்ந்து ஒருவருக்கு நாளாந்தம் தேவையான சக்தி (கலோரிகள்), அதற்கான உணவின் அளவுகள் அவற்றைக் கணிப்பிடும் பொதுவான முறைகள் என்பனவற்றை குறிப்பிட்டு ஒரு நீரிழிவு நோயாளி தான் ஏன் அளவுடன் உண்ண வேண்டும்? ஏன் சில உணவு வகைகளைக் குறைக்கவேண்டும்? தவிர்க்கவேண்டும்? என்பதனை நோயாளி புரிந்து கொள்ளும் வகையில் குறிப்பிட்டுள்ளமை நன்று.

நோயாளிக்கான மூன்று வேளை உணவு மாதிரிகள், மூன்று வேளை உணவு விகிதம் என்பவற்றுடன் மதிய உணவினை எவ்வாறு திட்டமிடுவது என்பதுபற்றி உதாரணங்கள் அட்டவணை மூலம் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் இதன்போது உணவில் கவனிக்கவேண்டிய விடயங்கள் தொடர்பில் அடுத்து வரும் அத்தியாயத்தில் தெளிவாக குறிப்பிட்டிருப்பது ஒரு நோயாளி அல்லது நீரிழிவு நோய் ஏற்படச் சாத்தியமானவர்கள் அவதானமாக உணவுப்பழக்கத்தினை ஏற்படுத்திக் கொள்ள உதவியாக அமைகின்றது. முக்கியமாக எமது உணவில் சேர்க்கப்படும் மசாலாப் பொருட்களை சித்தமருத்துவத்தில் குறிப்பிட்டுள்ள முக்குற்ற சம திரவியங்களின் ஊடாக விளங்கப்படுத்தியுள்ளார் நூலாசிரியர். நீரிழிவு ஏற்பட முக்கியமான காரணமான அதீத உடற்பருமன் தொடர்பில் அதனை அளவிடக்கூடிய முறைகளை இலகுவாக அனைவருக்கும் விளங்கக் கூடிய வகையில் இந்நூல் விளக்குகின்றது.

பதினோராவது அத்தியாயத்தில் நீரிழிவில் தேநீருக்குப் பதில் ஆவரசம் பூ குடிநீர் பற்றி குறிப்பிட்டுள்ளதன் ஊடாக ஆவரசின் மருத்துவ முக்கியத்தினை வெளிப்படுத்தியுள்ளார்.

தொடர்ந்து நீரிழிவில் உணவின் தன்மைகள் தொடர்பில் குறிப்பிட்டுள்ள நூலாசிரியர் உணவு ஒழுக்கத்தின்போது உணவின் "பசியாற்றும் உணர்வுத் திருப்திச் சுட்டி" (Satiety Index) என்பதனை கருத்தில் கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

இறுதி மூன்று அத்தியாயங்களில் நீரிழிவில் உள ஆரோக்கியத்தின் முக்கியத்துவம், உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தையும், திருக்குறளில் உணவு தொடர்பில் கூறப்பட்டுள்ள கருத்துகளை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். உடற்பயிற்சியில் யோகாசனத்தின் முக்கியத்துவத்தினையும் எந்தெந்த ஆசனங்கள் நீரிழிவுக்கு சிறப்பானவை என்பதை நான்கு பகுதிகளாக வகைப்படுத்தி குறிப்பிடப்பட்டுள்ளது சிறப்பு.

நீரிழிவு முகாமையில் உணவு, உள்ளம், உடற்பயிற்சி என மூன்று "உ" களின் முக்கியத்துவங்களையும் அவற்றின் சரிசமனான வகிபாகங்களையும் சிறப்பாக இந்நூலினூடு வெளிப்படுத்தி அனைவருக்கும் பயன்படக்கூடிய வகையில் இந்நூலினை உருவாக்கி இருப்பது வரவேற்கத்தக்கதும் காலத்துக்குத் தேவையானதும் ஆகும் என்பதில் ஐயமில்லை.



# ஊர்ப்புதினம்

## பாகம் 2

இராகவன்

எங்கட வீட்டோட அடுத்தடுத்து மூண்டு கோயிலிருக்குது. முதல்லயிருக்கிறது சாவகச்சேரி றோட்டோட வீரபத்திர பத்திரகாளியம்மன் கோயில். இது முந்திச் சின்னக்கோயில்தான். கருவறையும் அதுக்கடுத்த மண்டபமும் பொழிஞ்ச கல்லால கட்டினது. சுண்ணாம்புக் கல் மதிலும் சுத்திவர இருந்தது. அதில் கரும்பாசி படிஞ்சு பொருக்குக் கிளம்பிப் போயிருந்ததை என்ர சின்ன வயதிலை பாத்திருக்கிறன். இப்ப எல்லாம் அடியோட மாறிப்போச்சு. புதிதாச் சுத்துமதிலெல்லாம் கட்டி இராச கோபுரம் எழுப்பி வலு எழுப்பமாயிருக்குது.

எண்பதுகளின்ர நடுப்பகுதியில இதுவொரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாயிருந்தது. அப்பவிருந்தே இந்தக் கோயிலில பத்துநாள் திருவிழா நடக்கும். பேராசிரியர் சிவத்தம்பியின்ர நெருங்கின சொந்தக்காரர் ஒராளிருந்தவர், 'சிகரம்' கார்த்திகேசு எண்டு. கோயில் திருவிழாக்களுக்கெல்லாம் சிகரம் கட்டுறதில வலுவிண்ணன். அவரின்ர சிகரந்தான் திருவிழாவுக்குப் பிடிப்பினம். அது வலு எழுப்பமாயிருக்கும். சிகரத்துக்கு நடுவில முருகன், தெய்வானை திருக்கலியாணக் காட்சியை பொருத்தியிருப்பினம். பாக்கக் கலையழகோட தெய்வீகமாயிருக்கும். பத்து நாளிரவும் எங்களுக்கு வலுகொண்டாட்டம். இராத்திருவிழாவெல்லாம் களைகட்டும்.

42

அப்ப 'ஜனா' எண்டொரு பொம்பிளைப்பிள்ளை திருவிழாக்களுக்கு டான்ஸ் ஆடுறதில வலு பேமஸ். ஒருமுறை திருவிழாவுக்கு ஜனாவைக் கொண்டு வந்தினம். அப்பதான் விஜயகாந்தின்ர 'வைதேகி காத்திருந்தாள்' வந்து அமோகமா ஓடிக் கொண்டிருந்தது. அதில மதுரக்குரல், ராணி எஸ். ஜானகி பாடியிருந்த 'அழகு மலராட அபிநயங் கூட..." எண்ட பாட்டு பட்டிதொட்டியெல்லாம் ஒலிச்சு சுப்பர் ஹிட்டானது. ரேவதி அந்தப் பாட்டுக்கு அசுரத்தனமா ஆடியிருப்பா.

அந்தப் பாட்டுக்குத்தான் அண்டைக்கு 'ஜனா'வும் ஆடினது. மேடையில ஆடேல்ல. கூடியிருந்த சனத்துக்குள்ள ஓடியந்துதான் ஆடிச்சுது. அதுகும் எனக்கு நேரை முன்னால ஆடிச்சுது. 'தனிமையிலும் தனிமை கொடுமையிலும் கொடுமை. எதற்கு இந்த வாழ்வில் எனக்கு இந்தக் கோலம்' எண்ட வரிக்கு அபிநயம் பிடிச்சுது என்னைப் பாத்து. எனக்கெண்டால் சரியான வெக்கமாப் போச்சு. நான் தலையைக் கவிழ்ந்திட்டன். இதையெல்லாம் எனக்குப் பக்கத்திலயிருந்து சிவன் பாத்துக் கொண்டிருந்திருக்கிறான். (ஊர்ப்புதினம் முதலாம் பாகத்தில முதலாவது அத்தியாயத்தில வாற கதாநாயகன்) பிறகு அடுத்தநாள் இந்தக் கதையை ஊர்ப்பொடியளிட்டை பரப்பி என்னை "ஜனா! ஜனா!" எண்டு பட்டந்தெளிக்கத் தொடங்கிட்டான்.

ம்... அதெல்லாம் ஒரு பொற்காலம். இப்ப நினைக்கச் சிரிப்பாயிருக்கு.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் அரசியல் விடுதலையும் பொதுவேட்பாளரும்




அ.நிக்ஸன்

இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் தேசத்தின் தன்னாட்சியுரிமையுடனான இறைமைக் கோட்பாட்டைச் சிதைத்து உள்ளக விவகாரமாக மாற்றிவிடவேண்டும் என்ற நோக்கம் கொண்டவர்கள் ஒரு புறமும் ,தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களுடன் இரகசிய ஒப்பந்தங்களை ஒளித்து மேற்கொள்வதில் கைதேர்ந்த தமிழர்களின் தேசிய ஏமாற்றுக் கட்சிகள் மறுபுறமுமாக இலங்கை ஒற்றையாட்சி அரசின் ஜனாதிபதித் தெரிவில் ஈழத்தமிழர்களின் பொதுவேட்பாளர் என்ற கருத்தியலை குட்டிச் சுவராக்கும் சிதைப்பு நடவடிக்கைகளைத் திரைமறைவில் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர்.

இந்தச் சிதைப்பைத் தாண்டிய நிலையில் பொதுவேட்பாளர் எனும் கருத்தியல் வெற்றிபெற வேண்டுமானால் நடக்கவேண்டியது என்ன என்ற கேள்விக்குத் துரிதமாக தெளிவான தெளிவுபடுத்தல் அவசியமாகிறது.

யார் ,யார் என்ன சொல்கிறார்கள்? ஏன் அவர்கள் இவ்வாறெல்லாம் சொல்கிறார்கள்? அவர்களின் பின்னணியில் சதியாலோசனை இருக்கிறதா? என்பதை சமூக வலைப் பாணியில் ஆராய்ந்து குட்டையைக் கிளப்புவது கருத்தாக்க வெளிக்கு உகந்ததல்ல. கருத்துகளை கருத்துகளால் எதிர்கொள்வதே ஆக்கபூர்வமானது.

பொதுவேட்பாளர் எனும் கருத்தியல் எவ்வளவு முக்கியமானதோ அவ்வளவுக்கு பொதுவேட்பாளராக முன்வைக்கப்படவிருக்கும் மனிதரும் முக்கியமானவர்.

ஏன் என்றால் கருத்தியல் திசை திருப்பப்படுவதைப் போல அந்தக் கருத்தியலை ஆணையாகத் தாங்கும் மனிதரும் திசை திருப்பப்பட்டால் கருத்தியலின் ஆணையே தனது அடிநாதத்தை இழந்துவிடும்.

ஈழத்தமிழர் அரசியல் வரலாற்றில் இவ்வாறாக மக்கள் ஆணையைத் திசை திருப்பிய வரலாறு ஜீ. ஜீ. பொன்னம்பலம் போன்ற தலைவர்களில் இருந்து அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் வரை மட்டுமல்ல 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஈழத்தமிழர் தேசியம் பேசும் அரசியல் கட்சிகளில் மக்களாணை பெற்ற தலைவராகத் தன்னை வெளிப்படுத்தி பின்னர் சிங்கக்கொடியைத் தூக்கிப்பிடித்த முதுபெரும் இரா. சம்பந்தன் உள்ளிட்டவர்கள் ஊறாகத் தொடர்கிறது.

தேர்தல் வேட்பாளராக ஒரு தடியை நட்டு,'தடி முக்கியமல்ல அதன் பின்னால் இருக்கும் கருத்தியல் தான் முக்கியம், ஆகவே தடிக்கே உங்கள் வாக்கு' என்ற கருத்தியலை மக்களின் நேசிப்புடன் இயங்கும் நேர்மையான ஒரு போராட்டத் தலைமை முன்வைத்தால், அந்தக் கட்டுப்படும் போக்கு ஒரு காலத்தில் இருந்தது இன்று அது இல்லை.

இன்றைய ஆக்கிரமிக்கப்பட்ட ஈழத்தமிழர் தேசத்துக்கு அவ்வாறான அன்புக்கட்டளை பிறப்பிக்கும் நம்பகத்தன்மையை எந்த சிவில் சமூக அமைப்பும் இலகுவாகப் பெற்றுவிட இயலாது. ஆதலால், கருத்தியலும் உறுதியாக இருக்கவேண்டும், அதைத் தாங்கி வெளிப்படும் வேட்பாளரும் உறுதியானவராக இருக்கவேண்டும். இவை இரண்டும் பின்னிப்பிணைந்து வெளிப்படுவதே பொதுவேட்பாளர் என்ற கோட்பாடு.

இந்தக் கோட்பாட்டை பின்னால் எப்படி நகர்த்திச் செல்லலாம் என்ற அதீத கற்பனைகளில் ஈடுபட்டு வெறுந் தடிகளைத் தேட முற்பட்டால், தடியே தன்னைத் தாக்கும் நிலையே உருவாகும். ஆகவே, வெறுந்தடி வேட்பாளராகலாம் என்ற கதையை விட்டுவிட்டு உருப்படியான வேட்பாளரின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளவேண்டும்.

அதற்கும் முன்னதாக, பொதுவேட்பாளருக்கான கருத்தியல் எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பதில் தெளிவு நிலை அவசியமாகிறது. இந்தத் தெளிவைப் பெறுவதற்கு துருவங்கள் பெயர்ந்துள்ள உலகளாவிய அரசியற் போக்குகளையும் சர்வதேச நீதித் துறையில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்களையும் அவை தரும் வாய்ப்புகளையும் புரிந்திருப்பது மிகப் பிரதானமானது.

இலங்கைத் தீவின் உள்ளார்ந்த அரசியலோ, பொருளாதாரமோ, ஈழத்தமிழர் தேசத்தின் உள்ளார்ந்த அரசியலோ பொருளாதாரமோ, அல்லது இலங்கைத் தீவின் தேர்தல் அரசியலோ ஈழத்தமிழர் தேசத்துக்கான அரசியல் தீர்வை நல்கப் போவதில்லை என்பது வரலாற்று உண்மை.

ஈழத்தமிழர் தமது உரிமைக்கும் நீதிக்குமான அளவுகோல்களை ஒற்றையாட்சிக்கு உட்பட்ட பொறிமுறைகளுக்குள் ஒருபோதும் முடக்கக் கூடாது.

ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் வேரூன்றிய (Entrenched Clauses) தன்மைகள் ஈழத்தமிழர் தேசத்தால் ஒருபோதும் ஒப்புக்கொள்ள இயலாதவை. இந்த வேரூன்றிய தன்மைகள் பல உறுப்புரைகளில் வெளிப்படுகின்றன, இவற்றோடு ஆறாம் சட்டத்திருத்தம் போன்ற அரசியலமைப்புத் திருத்தங்களிலும் இவை வெளிப்படுகின்றன. இவ்வாறான உறுப்புரைகளையும் திருத்தங்களையும் ஒருசேர மறுதலிக்கும் ஈழத்தமிழர் ஆணையாக பொதுவேட்பாளரின் கொள்கைப் பிரகடனம் அமைய வேண்டும். அது உலக சமூகத்தை நோக்கிய பொறுப்புகள் சார்ந்த கோரிக்கையாக வெளிப்படவேண்டும்.

வேரூன்றிய தன்மை கொண்ட உறுப்புரைகள் எவை என்பதை தற்போதைய அரசியலமைப்பின் 83 ஆம் உறுப்புரை தெரிவிக்கிறது. அரசியலமைப்பின் உறுப்புரைகளான 1, 2 (ஒற்றையாட்சி), 3 (இறைமை தீவின் முழுமக்களுக்கானது சிங்கள ஏகபோகம்), 6 (சிங்கக் கொடி), 7, 8, 9 (பௌத்தத்துக்கு முன்னுரிமை), 10, 11 ஆகிய ஒன்பது உறுப்புரைகளில் ஏதேனும் புதிய அரசியலமைப்பு ஊடாகவேனும் மாற்றம் கொண்டு வரவேண்டுமாயின் இந்த உறுப்புரைகள் மூன்றில் இரண்டுக்கும் குறையாத நாடாளுமன்ற வாக்குகளோடு மட்டுமல்ல, இலங்கைத்தீவு முழுவதுமான பொது வாக்கெடுப்புடனும் ஜனாதிபதியின் ஒப்புதலுடனும் மட்டுமே மாற்றப்படலாம் என்ற மூன்று தடையோட்டங்களைத் தாண்டிச் செல்லவேண்டியதாக அமைந்துள்ள வேரூன்றிய சிக்கல் தன்மை இலங்கை ஒற்றையாட்சி அரசியலமைப்பில் உண்டு.

இந்த அரசியலமைப்புக்கு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஈழத்தமிழர் மக்களாட்சி ஆணை வழங்கப்படவில்லை. இலங்கை ஒற்றையாட்சி அரசின் இறைமைக்குள் மட்டும் குறுக்கப்படும் எந்த ஒரு பொறிமுறையூடாகவும், அதுவும் குறிப்பாக ஈழத்தமிழர் கூட்டு உரிமையை மறுக்கும் நோக்கில் அமைந்துள்ள அரசியல் அமைப்புக்கு உட்பட்ட தேர்தல் அரசியல் மூலமாக, தமிழ்த் தேசிய அபிலாஷைகள் ஒருபோதும் நிறைவேற்றப்பட இயலாதவை என்பது கண்கூடு.

ஆகவே, உள்ளக யாப்பு நிலையில் வேரூன்றிய தன்மைகளைத் தாண்டி ஈழத்தமிழரின் உரிமைக்குரல் எவ்வாறு சர்வதேச மயப்படுத்தப்படுகிறது என்பதிலேயே அரசியற் தீர்வுக்கான சூழலும் நீதிக்கான சூழலும் இலங்கைத் தீவுக்குள் உருவாகமுடியும்.

இதுதான் இலங்கைத் தீவின் ஒற்றையாட்சி ஈழத்தமிழர் மீது சுமத்தியுள்ள வரையறை. இந்த வரையறைக்கு அப்பால் ஈழத்தமிழர் தமது கூட்டு உரிமையையும் நீதிகோரலையும் பற்றுக்கோடாகக் கொண்டு நகர்வதன் மூலமே தமக்கான நீதியையும் கூட்டுரிமைகளையும் தீவுக்குள் நிறுவமுடியும்.

அது எப்படி?

வெளியக சுயநிர்ணய உரிமையை நியாயப்படுத்தல், ஈழத்தமிழர் தேசத்தின் தனித்துவமான இறைமையின் பாற்பட்டு புதிய யாப்புருவாக்கத்தை நிர்ப்பந்திப்பதற்கான சர்வதேசத் தரப்புகளின் பொறுப்பை வலியுறுத்தல், சர்வதேச நீதிக்கான சரியான தமிழர் நிலைப்பாடு மேலும் தெளிவாக நியாயப்படுத்தப்படல், ஒற்றையாட்சி நிராகரிப்பு தெளிவாக வெளிப்படுதல், மத முன்னிலைத்துவம் குறைந்த பட்சம் தமிழர் தாயகத்தில் அடியோடு மறுக்கப்படுதல் போன்ற நிலைப்பாடுகள் ஊடாக மட்டுமல்ல, ஐ.நா. மத்தியஸ்தத்துடனான பொதுவாக்கெடுப்பு என்ற கோரிக்கையையும் இணைத்து முன்வைப்பதன் ஊடாக தமிழர் பிரதிநிதிக்கான பொதுவாக்கெடுப்பாக ஈழத்தமிழர் தளத்தைப் பயன்படுத்தலாம்.

அதாவது ஈழத்தமிழரின் வெளியுறவுக் கொள்கையின் பாற்பட்டதாகவே பொதுவேட்பாளருக்கான ஆணை வடிவமைக்கப்படவேண்டும். உள்ளக அடிப்படைகளில் அல்ல என்பதே முடிந்த முடிபாகவேண்டும். இதிலே நழுவற்போக்குகளுக்கு இடமளிக்கப்படுவதாக பொதுவேட்பாளருக்கான கொள்கைப் பிரகடனம் அமையக் கூடாது. அதுமட்டுமல்ல, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் போர்க்குற்ற ஆதாரங்கள் பூதக் கண்ணாடிகளால் ஆய்வுக்குட்படுத்தப்பட்டிருக்கும் தருணம் இது என்பதை உணராத நிலையில் ஈழத்தமிழர் தமது அரசியற் கோரிக்கைகளை முன்வைப்பது அபத்தமானது.

வெளியக அழுத்தங்களோ, சர்வதேச விசாரணையோ பலனளிக்கப்போவதில்லை, உள்ளக செயல்முறைகளே இலங்கைக்கு இனிமேல் உவப்பானவை என்ற கருத்தியலை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் அறிக்கையின் பிரதான பிரேரிப்பாகக் கொண்டு வரவேண்டும் என்பதில் திரைமறைவில் பல நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அவற்றில் முன்வைக்கப்படும் கருத்தியல் எவ்வாறு வெளிப்படும் என்பதை அரசறிவியல் தெரிந்தவர்கள் மட்டுமல்ல,சாதாரண பொதுமக்களால் கூட ஊகிக்க இயலும். இலங்கை அரசு ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறையை விமர்சனங்கள் ஊடாகவும் தந்திரோபாயமாக அழுத்தங்கள் மூலமும் கையாளுகிறது. கடும்போக்கைக் கடைப்பிடிப்பதும் ஒருவித தந்திரோபாய உத்தியாக ஜெனிவா நோக்கி இலங்கை அரச தரப்பால் கையாளப்படுகிறது.

ஈழத்தமிழர்களின் மனித உரிமைத் தரப்புகள் அவ்வாறில்லை, வெறுமனே மேய்க்கப்படும் தரப்புகளாக அவை மாறியுள்ளன. ஐ.நா. மனித உரிமைப் பேரவை ஈழத்தமிழர் மீதான இன அழிப்பைத் தொடர்ச்சியாகப் புறக்கணித்து வருவது தொடர்பாக தமிழ்ப் பார்வையிலான விமர்சனங்கள் ஜெனீவாவை நோக்கி முன்வைக்கப்படவேண்டும்.

இலங்கைத் தரப்பு முன்வைக்கும் விமர்சனங்களும் தமிழ்த் தரப்பு முன்வைக்கும் விமர்சனங்களும் ஒரே தராசில் சீர்தூக்கிப் பார்க்கப்படுவது சர்வதேச மனித உரிமை அரசியலாகியுள்ள சூழலில் தமிழர் தரப்பு தனது நிலைப்பாட்டை விமர்சனப் பார்வையோடு வலியுறுத்தத் தவறுவது தனது தலையில் தானே மண்ணள்ளிப் போட்டுக் கொள்வதற்கு ஒப்பானது.

ஆகவே, பொதுவேட்பாளருக்கான கொள்கைப் பிரகடனம் சர்வதேசத்தை நோக்கியதாக அமைய வேண்டியதன் முக்கியத்துவம் இதன் மூலம் விளங்கிக்கொள்ளப்படுகிறது. இறுதியாக, பொதுவேட்பாளர் ஏன் சாதாரண ஒருவராக அமையக்கூடாது என்பதை விளங்கிக்கொள்வதும் முக்கியமாகிறது.

சர்வதேசக் கவனத்தை ஈர்க்கவியலாத, உள்ளக அழுத்தங்களுக்கு அடிபணியக்கூடிய, அனுபவமற்ற ஒருவரால் மேற்குறித்த பொதுவேட்பாளர் நிலைப்பாட்டை எடுத்துச் செல்ல இயலாது. அனுபவம் அற்றவர்கள் நிலைப்பாட்டை மாற்றக்கூடிய அழுத்தத்துக்கு உள்ளாகும் போது ஈழத்தமிழர் முன்வைக்கும் நிகழ்ச்சிநிரல் முழுமையாக அடிபட்டுப்போய்விடும்.

அழுத்தங்கள் எவ்வாறு உருவாக்கப்படலாம்?

முதலாவது, கருத்தியல் திரிபுநிலையை ஏற்படுத்தல். இரண்டாவது . திரைமறைவில் நடக்கும் நிதியூட்டல். மூன்றாவது . அச்சுறுத்தல் ஊடாக அடிபணிய வைத்தல்.

இம் மூன்று தடைகளையும் தாண்டி ஓடும் வலுவுள்ள ஒருவர் பொதுவேட்பாளராக முன்வைக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்த்தகத்துறை மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புகள் 2



**தொகுப்பு:**
*முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்*


**பல்கலைக்கழக நேரடி அனுமதிகளுக்குப் புறம்பான பட்டப்படிப்புக் கற்கை வாய்ப்புகள்**

பின்வரும் மூன்று வகையான நிறுவன அமைப்புகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளுக்கு அப்பால் வர்த்தகத் துறை சார் மாணவர்களுக்கான பட்டப்படிப்புக் கற்கை நெறி வாய்ப்புகளை வழங்குகின்றன.

(1) தனியார் பல்கலைக்கழகங்கள் அல்லது உயர்கல்வி நிறுவனங்கள்
(2) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறையின் கீழ் வராத, அரச சார் / பகுதி அரச சார் பல்கலைக்கழகங்களும் உயர்கல்வி நிறுவனங்களும்.
(3) அரச பல்கலைக்கழகங்களில் காணப்படும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறைக்குப் புறம்பான வெளிவாரிக் கற்கை நெறிகள் (External Degrees)

மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களுக்கான அனுமதிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நெறிப்படுத்தப்படுவதில்லை.
இந்த வகையில் பின்வரும் பத்து உயர்கல்வி நிறுவனங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறையின் கீழ்வராத உயர்கல்வி வழங்கும் அமைப்புகளாக விளங்குகின்றன.

(1) சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (KDU)
(2) தேசிய கல்வி நிறுவனம் (NIE)
(3) விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய நிறுவனம் (IAT)
(4) மனிதவள அபிவிருத்தி நிறுவனம். (IHRD)
(5) தேசிய வர்த்தக முகாமைத்துவ நிறுவனம் (NIBM)
(6) சமுத்திர துறை சார் பல்கலைக்கழகம் (Ocena University)
(7) வாழ்க்கைத் தொழில் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் (University of Vocational Technology)
(8) தேசிய சமூக அபிவிருத்தி கல்வி நிறுவனம் (NISD)
(9) வரைதல் மற்றும் அளவையியல் நிறுவனம் (ISM)
(10) திறந்த பல்கலைக்கழகம் (Opne University)



இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களுக்கு மேலதிகமாக 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழக சட்டத்தின் 16 ஆம் இலக்கத்தின் உப பிரிவு 25 யு இனால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு நிறுவனங்கள் வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான பட்டங்களை வழங்குகின்றன. இது தொடர்பான மேலதிக விவரங்களை கல்வி அமைச்சின் https:mohe.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம்.
எமது நாட்டிலுள்ள அரச பல்கலைக்கழகங்கள் பல்கலைக்கழக அனுமதி நடைமுறைகளுக்குள் உள்வாங்கப்படாத மாணவர்களுக்கான உயர் கல்வி வாய்ப்புகளை வழங்கும் பொருட்டு பல்வேறு வகையான வெளிவாரிரீதியான பட்டப்படிப்புக் கற்கை நெறி வசதிகளை வழங்குகின்றன. அந்த வகையில் வணிகத்துறை மாணவர்களுக்காக இலங்கைப் பல்கலைக்கழகங்கள் வழங்கும் வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கைகளின் விவரங்களை அட்டவணை 01 காட்டுகின்றது.

**அட்டவணை 01: இலங்கைப் பல்கலைக்கழகங்களிலான வெளிவாரி பட்டப்படிப்புக் கற்கைகளின் விவரங்கள்**

| பல்கலைக்கழகம் | கற்கைநெறி |
|---|---|
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் | வணிகமாணி<br>வியாபார முகாமைத்துவமாணி |
| கிழக்குப் பல்கலைக்கழகம் | வியாபார முகாமைத்துவ மாணி |
| தென்கிழக்குப் பல்கலைக்கழகம் | வணிகமாணி (பொது)<br>வியாபார நிர்வாகமாணி |
| பேராதனைப் பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி |
| கொழும்பு பல்கலைக்கழகம் | நிதிப் பொறியியலில் விஞ்ஞானமாணி |
| ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | வியாபார கற்கைகளில் விஞ்ஞானமாணி<br>முகாமைத்துவம் (பொது)<br>விஞ்ஞானமாணி<br>மானுடவியல் மற்றும் சமூக<br>விஞ்ஞானமாணி |
| களனிப் பல்கலைக்கழகம் | வணிகமாணி (சிறப்பு) |
| மொறட்டுவப் பல்கலைக்கழகம் | தகவல் தொழில்நுட்பமாணி |
| ரஜரட்ட பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி |
| சப்ரகமுவ பல்கலைக்கழகம் | வியாபார நிர்வாகமாணி<br>(விவசாய வியாபார முகாமைத்துவம்) |
| வயம்ப பல்கலைக்கழகம் | உணவு வியாபாரம் மற்றும் சந்தைப்படுத்தல் விஞ்ஞானமாணி |

**இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கற்கை நெறிகள்**

இலங்கை திறந்த பல்கலைக்கழகமானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் நேரடி அனுமதி முறைக்குப் புறம்பாக சான்றிதழ் கற்கை நெறிகள், டிப்ளோமா கற்கை நெறிகள், மற்றும் பட்டப்படிப்புக் கற்கை நெறிகள் மற்றும் பட்டப் பின்படிப்புக் கற்கை நெறிகள் ஆகியவற்றை வழங்கும் தேசியப் பல்கலைக்கழகமாகும். இங்கு திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் (ODL) அணுகுமுறை பின்பற்றப்படுகின்றது. இந்த முறைமையானது யாருக்கும், எங்கும், எந்த நேரத்திலும் கற்றல் வாய்ப்புகளுக்கான திறந்த மற்றும் நெகிழ்வான அணுகுதலை வழங்குகிறது. கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படும் இடங்களை நேரடியாக அணுகமுடியாத மாணவர்களுக்கு திறந்த மற்றும் தொலைதூரக் கற்றல் அணுகுமுறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மாணவர்களுக்கு அவர்கள் அமைந்துள்ள இடத்தில் கற்றல் வாய்ப்புகள் வழங்கப்படுவதுடன் அவர்களுக்கும் அவர்களின் சூழ்நிலைகளுக்கும் மிகவும் பொருத்தமான நேரத்தில் வழங்கப்படுகின்றது.
இந்த வகையில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வர்த்தகத் துறை சார்ந்த மாணவர்களுக்கு பின்வரும் பட்டப் படிப்புக் கற்கை நெறிகள் வழங்கப்படுகின்றன.

- முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- மனிதவள முகாமைத்துவத்தில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- சந்தைப்படுத்தல் முகாமைத்துவத்தில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- கணக்கியல் மற்றும் நிதியில் முகாமைத்துவக் கற்கைகள்மாணி
- சட்டமாணி

இவற்றுக்கு மேலதிகமாக உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்களும் தொழில் நுட்பக் கல்லூரிகளும் பல்வேறு உயர் தேசிய டிப்ளோமா மற்றும் டிப்ளோமா கற்கை நெறிகளை மாணவர்களுக்கு வழங்குகின்றன.
இந்த வகையில் உயர் தொழில் நுட்பவியல் நிறுவனங்கள் வணிகத்துறை மாணவர்களுக்கு பின்வரும் கற்கை நெறிகளை வழங்குகின்றன.

- கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDA)
- வியாபார நிர்வாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDBA)
- ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE)
- முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDM)
- தகவல் தொழில் நுட்பத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDIT)
- சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் முகாமைத்துவத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HNDTHM)

**இதே போன்று வணிகத்துறை மாணவர்களுக்கு தொழில் நுட்பக் கல்லூரிகளினால் பின்வரும் கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன.**

1. கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழ் (NVQ 4)
2. செயலாளரியல் பயிற்சிக்கான தேசிய சான்றிதழ் (NVQ 4)
3. கணக்கீட்டில் உயர்தேசிய டிப்ளோமா (NVQ 6)
4. கணக்கீட்டில் தேசிய டிப்ளோமா (NVQ 5)
5. சுருக்கெழுத்து தட்டெழுத்து மற்றும் கணினிப் பிரயோக உதவியாளர் தேசிய சான்றிதழ் (NVQ 3)

(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.துவாரகன்

# நினைவுகளில் தமிழறிஞர்:

# திரு. க. உமாமகேசுவரம்பிள்ளை

## (05.05.1934 - 20.04.2024)

## தமிழ் கூறும் நல்லுலகில் ஓர் 'அதிதீரன்':

2005 - 2008 காலப்பகுதியில் நான் கொழும்பில் சுகாதார அமைச்சில் பணியாற்றி வந்தேன். அந்தக்காலப் பகுதியில் பல்துறை ஆளுமைகளை நேர்காணல் செய்து வைகறை என்ற வார இதழில் பிரசுரித்தேன். கலை இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவரான திருமதி கோகிலா மகேந்திரனைச் செவ்வி கண்ட போது அவர், "நீங்கள் சந்திக்கவேண்டிய ஒருவர் இருக்கிறார். பண்டிதர் உமாமகேசுவரன்; அவர் தமிழுலகில் ஒரு வைரச் சுரங்கம்; தன்னை வெளிப்படுத்த மாட்டார். அவரிடமுள்ளதை வெளி உலகிற்குக் கொண்டு வரல் வேண்டும்" என்று கூறினார்.

பண்டிதர் உமாமகேசுவரனை தெஹிவளையில் அத்தப்பத்து மாவத்தையில் அமைந்துள்ள ஒரு மாடிவீட்டின் மேல் தளத்தில் முதன்முதலில் சந்தித்தேன். எனது விருப்பத்தைத் வெளிப்படுத்தினேன். "பேட்டி காண்பதை இன்னோர் தடவை பார்ப்போம்; தமிழ் படிப்போம்" என்றார். 18 வருடங்களாக அவரைச் சந்தித்து உரையாடிய விடயங்கள்; அவர் கற்பித்தவை; தமிழ் இலக்கணம் தொடர்பான சந்தேகங்களுக்கு அவர் அளித்த பதில்கள்; அருகேயிருந்து வாசித்த கதைகள், அவரது கடிதங்கள், செவ்வை பார்த்த கட்டுரைகள், அவரும் நானும் கேட்ட இசை....

இந்தப் பூமிக்கு ஒரே ஒரு சூரியன்! அந்தச் சூரியனுக்குக் கீழ் இருந்து அவரும் யானும் உரையாடியவை, நயந்தவை: சமயம், இலக்கியம், இலக்கணம், மொழிபெயர்ப்பு, சங்கீதம், ஒழுக்கநெறிகள், நீதிநூல்கள், சமகால உலகு என்றவாறு விரிந்து செல்லும்.

நான்கு தலைமுறை வழிவந்த தமிழ்மரபை, கல்விப் பாரம்பரியத்தை அவரிடமிருந்து அறிந்து கொண்டேன்; ஆறுமுகநாவலர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் - பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை - க. உமாமகேசுவரன்.

கொழும்பிலே வார விடுமுறை நாள்களில் அவரைச் சந்தித்து அவர் கூறும் விடயங்களைக் குறிப்பெடுத்துக் கொள்வேன்; அவ்வப்போது ஒலிப்பதிவு செய்வதும் உண்டு. நான் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றலாகி வந்த பின்னர் அவரைச் சந்திப்பதற்காகவும் கொழும்புக்குச் செல்வதுண்டு. பின்னர் யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் அவர் யாழ்ப்பாணம் வந்தார். அவரும் மனைவியும் கோண்டாவிலில் வாடகை வீடொன்றில் வசித்து வந்தார்கள்.

கோண்டாவிலில் அவர்கள் வசித்தபோது சிலவேளை ஒரு மாதம் அவரைச் சந்திக்காது பின்னர் சந்திக்கச் சென்று திரும்பும்போதெல்லாம் எனக்கு மிகுந்த துயரம் ஏற்படுவதுண்டு. அவர் இன்று கூறிய விடயங்களை இந்த உலகில் வேறு எங்கு நான் கேட்டு அறிந்து கொள்வேன்? ஒரு செவ்வியல் இலக்கிய நூலை வாசித்தும் அறிய முடியாதவற்றை அவரிடமிருந்து கேட்டு அறிந்துகொண்டேன். இவ்வளவு நாள்களும் இவரைச் சந்திக்காது இருந்து விட்டேனே என்ற கவலை ஏற்படும்.

உமாமகேசுவரன் அவர்கள் ஒரு போதும் அறநெறியை விட்டு விலகமாட்டார்கள். ஒரு கடினமான சொல் அவரிடமோ அவரது மனையாளிடமிருந்தோ என்றுமே வந்ததில்லை. அவருக்கு அருகிலே இருப்பது தவப்பொழுது. அவரிலே தழுவி வருகின்ற அந்தத் தென்றல் காற்று இனி எங்கே கிடைக்கும்? சிலவேளைகளில் அவர் ஐபாட்டில்(iPad) ஏதாவது வாசித்துக் கொண்டிருப்பார்; அல்லது ரஞ்சனிகாயத்திரியினதோ அன்றி அபிஷேக் ரகுராமினதோ கச்சேரியைக் கேட்டுக் கொண்டிருப்பார். நான் அவருக்கு அருகில் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்களில் ஏதாவது ஒன்றை எடுத்து வாசிப்பேன். எனது நேரம் வந்ததும் நான் "சென்று வரப்போகிறேன்" என்பேன். அவர் சொல்வார், "மெத்த நல்லது" என்று. அப்போது அவரது மனையாள் திருமதி சாவித்திரி ஆசிரியை கூறுவார், "துவாரகன் உங்களிடம் படிக்க வந்திருக்கிறார். நீங்கள் ஐபாட்டை பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்." அதற்கு அவர் சொல்வார், "துவாரகன் எதுவும் கேட்கவில்லை. அவர் தன்பாட்டில் ஏதோ படிக்கிறார்."

இறுதிக் காலத்தில் சில வருடங்கள் அவரால் நடமாட முடியாத நிலை ஏற்பட்டது. "நான் எவ்வளவு காலத்துக்கு இருப்பேனோ தெரியாது. நீங்கள் கேட்க வேண்டிய எல்லாவற்றையும் என்னிடம் கேட்டு அறிந்து கொள்ளுங்கள்" என்பார். பண்டிதர் உமாமகேசுவரன் அச்சது பொடிசெய்த "அதிதீரனாகிய" விநாயகப் பெருமான் மீது அளவற்ற பத்தி கொண்டவர். இதனால் தனது மூத்த மகனுக்கு சுமுகன் என்ற பெயரையும் சேக்கிழாரது ஒப்புவமையில்லாப் பெரியபுராணத்தின் பத்திச் சுவை சொட்டும் பாடல்கள் மீது கொண்ட காதலால் இளைய மகனுக்கு சேக்கிழான் என்று பெயரையும் வழங்கி மகிழ்ந்தார்.



பண்டிதர் க. உமாமகேஸ்வரம்பிள்ளை
ஆதாரம் : குடும்ப புகைப்படத் தொகுப்பு



பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை
ஆதாரம் : குடும்ப புகைப்படத் தொகுப்பு

1

அவர் பிறந்தது தெல்லிப்பழையில் விழிசிட்டி என்ற ஊரில். நான் பிறந்து வளர்ந்த ஏழாலைக் கிராமத்திலும் விழிசிட்டி என்ற குறிச்சி உள்ளது. நானும் அண்ணாவும் சிறுவர்களாக இருந்தபோது விழிசிட்டியில் எங்களது வீட்டுக்கு அருகே வசித்த சின்னையா உபாத்தியாயர் (சின்னையா மாஸ்ரர்) வீட்டுக்குத் தினமும் மாலை 6.00 மணிக்குப் படிக்கச் செல்வோம். நான் இப்போதும் உறுப்பாகத் தமிழ் எழுதுவேன் என்றால் அதற்கு சின்னையா ஆசிரியரே காரணமாவார். "தீ" னாவுக்கு எப்படி விசிறிபோடுவது என்று அவர் சொல்லித்தந்தது இப்போதும் ஞாபகம் இருக்கிறது. நானும் உடன் பிறந்தவர்களும் ஏழாலை தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலேயே ஆரம்பக் கல்வியைக் கற்றோம். எங்கள் காலத்தில் அதிபராக இருந்த நவரத்தினம் ஆசிரியர், அவரது மனையாள் இராணி ரீச்சர், ஆசிரியை திருமதி இரத்தினம் ஆகியோர் எனது நினைவில் வரும் ஆரம்ப கால ஆசிரியர்கள்.

தெல்லிநகருக்குத் (தெல்லிப்பழை) திலகம் என்றால் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம். இன்று உலகெங்கும் வாழும் சைவத் தமிழர்கள் மத்தியில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஒரு திலகமாகத் திகழ்கின்றாள். 1986 இல் நான் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் 6 ஆம் ஆண்டில் சேர்ந்தேன். அந்தக் கல்லூரியின் கீதத்தில், "யூனியன் தாயை" வாழ்த்துகின்றபோது "தெல்லி மணிநகர்க் கோர் திலகம் எனத் திகழ்ந்து" என்று ஒருவரி வரும். இதுவும் அமெரிக்கன் மிசனரிகளால் உருவாக்கப்பட்ட பாடசாலை; 1816 இல் ஸ்தாபிக்கப்பட்டது. இங்கு சாதாரண தரம் வரை தமிழ் படித்தேன். தமிழாசிரியர்களில் இராஜேஸ்வரி, திருமதி. சுப்பிரமணியம் (மகாலட்சுமி) ஆகியோர் என் நினைவுக்கு வருகின்றார்கள். நான் உயர்தரத்தில் கணிதத்துறையில் சேர்ந்தேன். பல்கலைக்கழகத்திலும் கணிதத்தையே கற்றேன். ஒருநாள் எமது கல்லூரியில் படித்தவரும் 3 வருடங்கள் இளையவருமான இந்திரமோகனுடன் (மருத்துவர்) அளவெட்டியில் வசித்த ஆங்கில ஆசிரியர்க. சுப்பிரமணியத்தைச் சந்திக்கச் சென்றவேளை எமது தமிழ் ஆசிரியர்களில் ஒருவரான மகாலட்சுமி ரீச்சரது கணவர் தான் க. சுப்பிரமணியம் ஆசிரியர் என்பதை அறிந்த போது ஆச்சரியமாக இருந்தது. திருமதி சுப்பிரமணியம் ஆசிரியை அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரி. பேராசிரியராக வரவேண்டியவர்; குடும்பச்சூழல் அதற்கு இடம் கொடுக்கவில்லை. சில வருடங்களுக்கு முன்னர் திருமதி சுப்பிரமணியம் ஆசிரியை காலமாகிய செய்தியை உமாமகேசுவரன் ஆசிரியர் அவர்களிடம் சொன்ன போது நீங்கள் அவரைப் பற்றி ஒரு அஞ்சலிக் குறிப்பு கட்டாயம் எழுதவேண்டும் என்று சொன்னார். இன்னும் எழுதவில்லை. உமாமகேசுவரன் பண்டிதராக, நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் அவர் பயிற்றப்பட்ட ஓர் ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். சோ.ப. என்று குறிப்பிடப்படும் நாடறிந்த கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான சோமசுந்தரம் பத்மநாதன் , பண்டிதர் உமாமகேசுவரனோடு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உடன் பயின்றவர். நான் பாடசாலைக் காலத்துக்குப் பின்னர் தமிழ்மொழியை அதன் சிறப்பை, இலக்கியக் கருவூலங்களை, தொல்காப்பியத்தை, நன்னூலை அறிந்து கொண்டதும், நல்ல தமிழை எழுதக் கற்றுக் கொண்டதும் ஆசிரியர் உமாமகேசுவரனிடமிருந்தே.

உமாமகேசுவரன் பண்டிதராக, நாவலர் பரம்பரையைச் சேர்ந்தவராக இருந்தபோதிலும் அவர் பயிற்றப்பட்ட ஒரு ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றினார். சோ.ப. என்று குறிப்பிடப்படும் நாடறிந்த கவிஞரும் மொழிபெயர்ப்பாளருமான சோமசுந்தரம் பத்மநாதன், பண்டிதர் உமாமகேசு வரனோடு பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் உடன் பயின்றவர்.


சிலகாலத்துக்கு முன்னர் வடபுல யாழ்ப்பாணத்தில் ஆங்கில மருத்துவத்தை அறிமுகப்படுத்தியவர்களையும் மருத்துவர் கிறீனையும் பற்றிய மருத்துவ வரலாற்றுத் தொடரை உதயன் சஞ்சீவியில் தொடராக எழுதி வந்தேன். அவை 26 வாரங்கள் வெளிவந்தன. வாரந்தோறும் பத்திரிகையில் வெளிவந்த ஆங்கில மருத்துவ வரலாற்றுத் தொடரைப் படித்த பலர் எனது எழுத்துகளைப் பாராட்டியிருந்தனர். உணர்வழியியல் சிகிச்சை நிபுணரான திருமதி ஜானகி, இருதய சிகிச்சை நிபுணர் லக்ஷ்மன், சத்திர சிகிச்சைத்துறைப் பேராசிரியரும் சத்திரசிகிச்சை நிபுணருமான ரவிராஜ், சத்திர சிகிச்சை நிபுணர் தயாளன் அம்பலவாணர் முதலானோர் எனது எழுத்துகளைப் பாராட்டி தொடர்ச்சியாக எழுதுவதற்கு ஊக்கம் அளித்தனர். இத்தொடரை எப்போது நூலாக்குவீர்கள் என்று மருத்துவர்கள் சிலர் கேட்டனர். இந்தப் பாராட்டுகளுக்கு எந்தவகையிலும் நான் உரியவன் அல்லேன். இந்தப் புகழ் அனைத்துமே எனது தமிழாசிரியர் உமாமகேசுவரம் பிள்ளையையே சாரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
02 ஜூன் 2024

# ரணிலின் சவால்; ஒளிந்திருக்கும் ஒற்றர்கள்



தி.ராஜ்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வடக்குப் பயணம் தேர்தலுக்கான முன்னோட்டமே என்பது வெளிப்படையானது. ஆனால் அவரது பயணம் பல தளங்களிலும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக தமிழ்ப் பொது வேட்பாளர் தொடர்பான விவகாரத்தில் அவர் தெரிவித்த கருத்துகள் பல்வேறு விதமான நோக்குநிலைகளை உண்டாக்கியிருக்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் வீடு தேடிச்சென்ற ஜனாதிபதி ரணில், அவரிடம் அங்கு தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்த முடியாது என்று சாரப்பட்ட பல விடயங்களைக் குறிப்பிட்டிருக்கின்றார். அதில் அடிநாதமாக ரணில் குறிப்பிட்ட விடயம், 'தமிழர்களிடம் ஒற்றுமையில்லை. உங்களால் ஒற்றுமையாக தமிழ் பொதுவேட்பாளரை நிறுத்தமுடியாது' என்பதுதான். ரணில் விக்கிரமசிங்க கூறியதைப்போன்று தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழ்த் தரப்பில் குறிப்பாக தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒருமித்த நிலைப்பாடு இல்லைத்தான்.

போரின்போது படைத்தரப்புகள் வெல்வதற்காக பல்வேறு யுக்திகளைக் கையாளும். ஒற்றர்களை - உளவாளிகளை எதிரிகளின் படைகளுக்குள் உலாவவிடுவார்கள். அவர்கள் ஊடாக எதிரிகளின் நகர்வுகளை அறிவது மாத்திரமல்ல, எதிரிகளின் மனநிலையை உடைக்கவும் செய்வார்கள். இவை எல்லாவற்றுக்கும் மேலாக எதிரிகளால் எந்தவொரு நகர்வும் எடுக்கமுடியாதவாறு முட்டுக்கட்டைகளையும் இந்த உளவாளிகள் ஏற்படுத்துவார்கள். அதாவது எதிரிப்படைக்காக தாம் உயிரைக்கொடுப்பது போன்று நம்பவைத்து, கவிழ்த்துவிடுவார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனிடம் விடுத்த சவாலைப் பார்க்கும்போது அப்படித்தான் தெரிகின்றது. 'உங்களால் முடிந்தால் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிறுத்திக்காட்டுங்கள்' என்று அவரால் அவ்வளவு துணிச்சலாகக் கூறமுடிகின்றது என்றால், தமிழ்ப் பரப்பில் பொதுவேட்பாளரை களமிறக்கப்படாமல் செய்வதற்குரிய நகர்வுகளை அவர் திறம்பட முன்னெடுத்துவிட்டார் என்பதுதான் அர்த்தம்.
ரணிலின் கூற்றுத் தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வேறுபட்ட விளக்கத்தை கொடுக்கின்றது.' உங்களால் தமிழ்ப் பொதுவேட்பாளரை களமிறக்க முடியுமா என தமிழர்களை அவர் சீண்டுகின்றார். இந்த உசுப்பேத்தல் ஊடாக தமிழ் மக்கள் தமிழ்ப் பொதுவேட்பாளரை நிச்சயம் களமிறக்குவார்கள். அவ்வாறு களமிறக்கப்படுவதன் ஊடாக தமிழ் மக்களின் வாக்குகள் தனது போட்டியாளரான சஜித்துக்கு கிடைக்காமல்போகும்' என ரணில் கணக்குப்போடுவதாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கூறுகின்றது.

அப்படி உசுப்பேத்தல்களாலும், சீண்டல்களாலும் தமிழ் மக்கள் எதிர்வினையாற்றுவார்களாக இருந்தால், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுக்கும் போராட்டங்களில் மக்கள் பல ஆயிரக்கணக்கில் திரண்டிருக்கவேண்டும். எமது நிலத்தை ஆக்கிரமித்து சிறிலங்கா இராணுவம் கட்டியுள்ள சட்டவிரோத திஸ்ஸ விகாரைக்கு எதிராக ஒவ்வொரு பௌர்ணமிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராடிவருகின்றது. எங்கள் நிலத்தை பௌத்த பேரினவாதம் கண்முன்னே கபளீகரம் செய்யும்போது கூட வராத உணர்வெழுச்சியா ரணிலின் இந்தக் கதையைக்கேட்டு வரப்போகின்றது?
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தனது அடிமைகள் ஊடாக தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கத்துக்கு குந்தகம் விளைவிப்பதற்கான திட்டத்தை தயார்ப்படுத்திவிட்டார். அதனால்தான் அவரால் துணிந்து சவால் விடுக்க முடிந்திருக்கின்றது.

அவரது அடிமைகள், தமிழ்த் தேசிய சாயத்தைப் பூசிக்கொண்டு பொதுவேட்பாளர் விவகாரத்துக்கு குந்தகம் விளைவிக்கத்தொடங்கிவிட்டனர். ரணிலின் இந்த ஒற்றர்கள் தொடர்பிலேயே தமிழ் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். தமிழ் மக்களுக்காக உழைப்பதாகக் காட்டிக்கொண்டு, தமிழர்களை கருவறுப்பதே இவர்களின் பணியாக இருக்கும்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்கு எந்தச் சிங்களத் தலைவர்களும் தயாரில்லை. ஆனால் தமிழ் மக்களின் வாக்குகள் மாத்திரம் தேவை என்பதில் உறுதியாக இருக்கின்றனர். இப்படிப்பட்ட சிங்களத் தலைவர்களை வெல்ல வைப்பதற்காக தமிழ்த் தேசியம் பேசிக்கொண்டு சிலரும் புறப்பட்டிருக்கின்றனர். இப்படிப்பட்டவர்களாலேயே போரின் பின்னரான 15 ஆண்டுகளில் தமிழ் மக்கள் வாழ்வில் எந்தவொரு முன்னேற்றமும் ஏற்படவில்லை. இனியாவது இந்தப் பிரதிகிருதிகளை ஒதுக்கிவிட்டால், தமிழ் மக்கள் முன்னேறிவிடலாம். ■

# ஒரு எதிர்வினை

(கடந்தவாரம் சஞ்சீவியில் வெளியான 'பொது வேட்பாளரை எதிர்ப்போரிடம் சில கேள்விகள்' என்ற கட்டுரை தொடர்பான ஒரு வாசகக்குறிப்பு)

ந.சதாசிவ ஐயர்

கூலிவேலைக்குச்செல்பவர்முதல் சாய்மனையில் சாய்ந்திருப்பவர் வரை பல்லாயிரம் பேர் படிக்கும் பத்திரிகையில் சம்பந்தனுக்கும் '13 ஐ'சப்பி துப்புபவர்க்கும் எழுதப்பட்ட விடயத்தை போட்டு என்ன பிரயோசனம் ? வாக்களிக்கப்போகும் பாமரர் நாங்கள். எங்களுக்கு என்ன சொல்ல வருகிறீர்கள்? எங்களைப் பலரும் அறிவர். நாங்கள் உங்களுக்கு பின்னால வருவம் எண்ட நினைப்போ?? அது கஷ்டம் தம்பி. நாங்கள் ஆட்டு மந்தைகள். மேய்ப்போன் பின்னால் போவோம். நல்ல தண்ணியும் புல்லும் இலைகுழையும் கிடைத்தால் போதும். அங்கஜன் ஐயா, டக்ளஸ் ஐயா, மகேஸ்வரன் அம்மா. ஒருபுறம். கஜன், பிள்ளையான்..........இன்னொருபுறம். இவைக்குப்பின்னால நிக்கிற நாங்கள் அவேன்ர வாலை விட்டுட்டு கோட்டைத் தாண்டுவம் எண்டோ நினைக்கிறியள்.
என்ன இருந்தாலும் ரணில், ரணில்தான். பிரச்சினைக்கு முன்வந்து முகம் கொடுத்த மனிசன். ஒருமாதிரி சமாளிச்சுப்போட்டுது. அவரைப்போல இங்கிலிசில வெட்டிவிழுத்தி சர்வதேசத்தக் கையாள யாரால ஏலும். இப்ப கரைச்சல் இல்லாமல் வியாபாரம் ஓடுறமாதிரி ஓடவும்வேணும், வெளிநாட்டுக்குப் போகவும் வரவும், காணிவாங்கி கடை ,வீடு கட்டவும் திருவிழா பண்ணவும் வேணும் எண்டு ஏதோ காலம் ஓடுது.
இப்படியெல்லாம் நாங்க நினைக்கிறம். நீங்கள் என்னடாவெண்டால்........?
தம்பி ஒண்டுசொல்லுறன். வைரவருக்கு வடைசுட எண்டால் பெண்டுகள் 25,30 எண்டுவருவினம். பூசை முடிய 100 பேருக்கு மேல் வருவம். உங்கட கஞ்சி காய்ச்ச கம்பஸிலும் 10,12 தான். குடிக்கவும் மறிச்சு மறிச்சுத் தானே குடுத்தனியள். வெசாக் தானத்துக்கு விழுந்து கட்டி ஓடினனாங்கள்.
இன்று உதயனுமல்லோ அதைச்சொல்லிக் காட்டிப் போட்டுது. தம்பி நிலாந்தன் எல்லாத்தையும் கரைச்சு குடிச்சுப்போட்டு வெளிக்கிட்டிருக்கிறாய். பிறகு எல்லாத்தையும் கூட்டிக்கழிச்சு போட்டு சர்வதேசம், அரசு, என்.ஜி.ஓ. எல்லாம். ...............யால சிரிப்பாங்கள். கவிட்டுக் கொட்டிப்போடாதிங்கடாப்பா.
கவனமடா ராசா.
இது சும்மா கதையல்ல. மக்கள் கூடுமிடங்களின் அன்றாட அலசல்கள். அதிகாரிகள் படித்தவர்கள் புள்ளிவிவரம் அறிந்தவர்கள் என உயர்மட்டம் வியாபாரிகள் மட்ட சகல மட்டங்களிலும் கதைக்கப்படுபவையின் தொகுப்பு. இதற்கு அமைவாக உத்தேச புள்ளிவிவரத்துடன் ஆதாரங்களுடன் வெல்லமுடியும் (அதாவது 80% க்கு மேல் )ஆதரவு கிடைக்கும் என்பதை விவரித்தால் வெற்றியுமதே. ■

# நடுத்தர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு தனி நபருக்கானவை அல்ல. அங்கு ஒரு தனிநபர் வேட்பாளராக நிறுத்தப்படுவார். ஆனால் அவர் எந்த ஒரு கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தமாட்டார். எந்த ஒரு சமயத்தையோ அல்லது சாதியையோ அல்லது பிராந்தியத்தையோ அவர் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடாது. தமிழ் மக்களை இப்பொழுது பிரித்து வைத்திருக்கும் எதனையும் அவர் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடாது. அவர் தமிழ்த் தேசிய ஐக்கியத்தின் குறியீடாக நிற்க வேண்டும். அவர் ஒரு பிரமுகராகக்கூட இருக்கவேண்டும் என்று இல்லை. அவர் தமிழ் மக்களின் ஐக்கியத்தைப் பிரதிபலிப்பார். அல்லது தமிழ் மக்களின் பொது நிலைப்பாட்டைப் பிரதிபலிக்கும் ஓர் அடையாளம். அவ்வளவுதான்.
அவ்வாறு தேர்தலில் போட்டியிடும் தமிழ்வேட்பாளர் அந்தத் தேர்தல்மூலம் தனக்குக் கிடைக்கும் பிரபல்யத்தையும் பலத்தையும் எதிர்காலத்தில் கட்சித் தேவைகளுக்காகப் பயன்படுத்தக்கூடாது என்ற ஓர் உடன்படிக்கை அவரோடு எழுதப்பட வேண்டும் என்று சிவில் சமூகங்கள் எதிர்பார்க்கின்றன. எனவே ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தப்படக்கூடிய ஒரு தமிழ்ப்பொது வேட்பாளர் எனப்படுகின்றவர், தனக்காக வாக்குக் கேட்கப் போவதில்லை. ஒரு கட்சிக்காக வாக்குக் கேட்கப்போகவில்லை. தமிழ் ஐக்கியத்துக்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ்ப் பொதுநிலைப்பாட்டுக்காகத்தான் வாக்குக் கேட்பார். தமிழ் மக்கள் ஒரு தேசமாகத் திரண்டுவிட்டார்கள் என்பதனை நிரூபிப்பதற்காக வாக்களிப்பது. அதாவது தமிழ் மக்கள் தங்களுக்குத் தாங்களே வாக்களிப்பது. கடந்த 15 ஆண்டுகால தமிழ் வாக்களிப்புப் பாரம்பரியம் எனப்படுவது அரசியல்வாதிகள் தங்களுக்காக வாக்குச்சேர்க்கும் ஒரு பாரம்பரியம்தான். ஒவ்வொரு வேட்பாளரும் தனக்கென்று காசு செலவழித்து தனக்கென்று விசுவாசிகளை உருவாக்கி தனக்காக வாக்கு சேகரிக்கும் ஒரு கட்சி அரசியல் பாரம்பரியம். அதிலும் விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின்கீழ் ஒரு கட்சிக்குள்ளேயே ஒரு வேட்பாளர் சக வேட்பாளரை போட்டியாளராகப் பார்ப்பார்.
ஆனால் பொதுவேட்பாளர் என்று வரும்பொழுது அங்கே ஒவ்வொரு அரசியல்வாதியும் தனக்காகவோ தனது கட்சிக்காகவோ வாக்குச்சேர்க்கப்போவதில்லை. அவர்கள் தேசத்துக்காக வாக்குச்சேர்க்க வேண்டியிருக்கும். தேசத்துக்காக தமது சொந்தக் காசை செலவழிக்க வேண்டியிருக்கும். தேசத்துக்காக தமது உழைப்பை முதலீடு செய்ய வேண்டியிருக்கும். தேசத்துக்காக அர்ப்பணித்து உழைக்கவேண்டியிருக்கும். அதாவது தேசத்துக்காக வாக்குச் சேர்ப்பது. இது கடந்த 15 ஆண்டுகளாக அருகி வரும் ஒரு போக்கு. இதைப் பலப்படுத்தினால் தமிழ்மிதவாத அரசியலில் நேர்மையானவர்கள், கண்ணியமானவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அது தமிழரசியலை ஒரு புதிய தடத்தில் ஏற்றும். அதற்கான தொடக்கம்தான் தமிழ்ப்பொது வேட்பாளரை முன்னிறுத்தும் நோக்கத்தோடு கட்சிகளும் குடிமக்கள் சமூகங்களும் இணைந்த ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்குவது. கட்சிகள் அதற்குத் தயாராக இருந்தால், குடிமக்கள் சமூகங்களின் வேலை இலகுவாகிவிடும்.
இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு கட்சிக்குள் நடந்த தேர்தலின் பின் விளைவுகள் தமிழ்மக்கள் சிறுமைப்பட்டுவிட்டார்கள் என்பதை நிரூபித்தது. அப்படிதான், இந்த ஆண்டின் இறுதியில் நடக்கக்கூடிய ஒரு தேர்தல் தமிழ் மக்கள் சிதறிப் பலங்குன்றிப் போயிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கக்கூடாது. அது தமிழ்மக்கள் ஒரு தேசமாகத் திரண்டுவிட்டார்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். அதற்குத் தமிழ்ப் வேட்பாளரைத்தவிர வேறு தெரிவு உண்டா? ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org